பக்கங்கள் – 12
விலை – ரூபா 50

Registered as a Newspaper

# உதயன்

சுடர் : 40
கதிர் : 181

செவ்வாய்க்கிழமை
27 மே 2025

வைகாசி 13 ஆம் நாள்
வள்ளுவர் ஆண்டு 2056

## ஹெரோய்னுடன் இளைஞர் கைது

யாழ்ப்பாணம், மே 27
ஹெரோய்னை உடைமையில் வைத்திருந்த குற்றச்சாட்டில் இளைஞர் ஒருவர் கோப்பாய் பொலிஸாரால் கைதுசெய்யப்பட்டுள்ளார். பொலிஸாருக்குக் கிடைத்த இரகசியத் தகவலுக்கு அமையவே இந்தக் கைது நடவடிக்கை 11



## குளத்தில் மூழ்கி இளைஞர் சாவு!

வவுனியா, மே 27
வவுனியா கனகராயன் குளத்தில் மூழ்கி இளைஞர் ஒருவர் நேற்று உயிரிழந்துள்ளார். 11

அதிக ஆசனங்களைப் பெற்ற

## தமிழ்த் தேசியத் தரப்புகள் ஆட்சியமைப்பதற்கு ஆதரவு

### தமிழ்த் தேசியப் பேரவை தீர்மானம்

யாழ்ப்பாணம், மே 27
உள்ளூராட்சித் தேர்தலில் அதிக ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியத் தரப்புகள் ஆட்சியமைப்பதற்கு ஆதரவு வழங்குவது என்று தமிழ்த் தேசியப் பேரவை தீர்மானித்துள்ளது.
இது தொடர்பில் தமிழ்த் தேசியப் பேரவையால் அனுப்பிவைக்கப்பட்டுள்ள ஊடக அறிக்கையில் உள்ளதாவது:-
உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பிலும், ஆட்சியைத் தீர்மானிப்பது தொடர்பிலும் தமிழ்த் தேசியப் பேரவையின் 11





## ஓமந்தையில் நேற்று விபத்து இந்தியத் தூதரக அதிகாரி பலி

வவுனியா, மே 27
வவுனியா ஓமந்தைப் பகுதியில் நேற்றுத் திங்கட்கிழமை அதிகாலை 4.30 மணியளவில் டிப்பரும் காரும் மோதி விபத்துக்குள்ளானதில் ஒருவர் உயிரிழந்தார். அத்துடன் மேலும் மூவர் படுகாயங்களுடன் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். 11

அத்துமீறிய மீன்பிடி, போதைப்பொருள் கடத்தலைத் தடுக்க

# இலங்கைக் கடற்பரப்பில் அதியுச்சப் பாதுகாப்பு

### உடன் நடைமுறைப்படுத்த உயர்மட்டக் கூட்டத்தில் முடிவு

கொழும்பு, மே 27
இலங்கையின் கடற்பரப்பில் உடனடியாக நடைமுறைக்கு வரும் வகையில் பாதுகாப்புப் பலப்படுத்தப்பட்டுள்ளது. கொழும்பில் இடம்பெற்ற உயர்மட்டக் கலந்துரையாடலைத் தொடர்ந்தே இந்தத் தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. 11




மன்னார் மாவட்டத்தில்

## ஜிம் பிறவுண் மாதிரிக்கிராமம் பொதுமக்களிடம் கையளிப்பு!

மன்னார், மே 27
இந்திய - இலங்கை அரசாங்கத்தின் நிதி உதவியுடன், மன்னார் நகரசபை பிரிவிலுள்ள ஜிம் பிறவுண் கிராமத்தில் அமைக்கப்பட்ட 24 வீடுகள் நேற்றுப் பொதுமக்களிடம் கையளிக்கப்பட்டன.
மன்னார் மாவட்டச் செயலரின் தலைமையில் இடம் 11





## பிரிட்டனின் உயர்கல்வியில் இலங்கையர்கள் ஆதிக்கம்!

### பிரிட்டன் வர்த்தக அமைச்சர் தெரிவிப்பு

கொழும்பு, மே 27
பிரிட்டனில் உயர்கல்வியைப் பெறும் மாணவர்களின் எண்ணிக்கையில் இரண்டாவது இடத்தில் இலங்கை மாணவர்களே காணப்படுகின்றனர் என்று பிரிட்டனின் வர்த்தக அமைச்சர் ஹோர்னெட் பிரபு தெரிவித்துள்ளார்.
இலங்கைக்கு வந் 11

## ஜூன் 3ஆம் திகதிமுதல் நாடாளுமன்ற அமர்வுகள்

கொழும்பு, மே 27
நாடாளுமன்றம் எதிர்வரும் ஜூன் மாதம் 3ஆம் திகதி முதல் 6ஆம் திகதிவரை கூடவுள்ளதாக நாடாளுமன்ற செயலாளர் நாயகம் குஷானி ரோஹணதீர தெரிவித்துள்ளார். 11

முச்சந்தி முரளி

'பாப்பம் கடலையாவது ஒழுங்கா காவல் பாக்கினமோ எண்டு'

## சிறுபோக நெற்செய்கையில் இலை மடிச்சுக்கட்டி நோய்!

### அவதானமாக இருக்குமாறு விவசாயிகளுக்கு அறிவுறுத்து



கிளிநொச்சி, மே 27
கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் மீண்டும் இலை மடிச்சுக்கட்டியின் தாக்கம் அதிகரித்துவருவதாக கிளிநொச்சி 11

## கொழும்பு மாநகரசபையின் முதல்வர் வேட்பாளர் யார்?

### இன்று அறிவிக்கவுள்ளது ஐ.ம.ச.

கொழும்பு, மே 27
கொழும்பு மாநகரசபையின் முதல்வர் வேட்பாளர் யாரென்பதை ஐக்கிய மக்கள் சக்தி இன்று அறிவிக்கவுள்ளது.
ஐக்கிய மக்கள் சக்தியின் முக்கியஸ்தரான நிரோஷன் பாதுக்க, கொழும்பில் 11



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

| கொவிசெத | ஹந்தஹன ராசி சுப பலன் | NLB ஜய | மெகா பவர் | மஹஜன சம்பத | தன நிதானய | அத சம்பத |
|---|---|---|---|---|---|---|
| திகதி 26.05.2025 | திகதி 26.05.2025 | திகதி 26.05.2025 | திகதி 26.05.2025 | திகதி 26.05.2025 | திகதி 26.05.2025 | திகதி 26.05.2025 |
| சீட்டிழுப்பு இலக்கம் 4083 | சீட்டிழுப்பு இலக்கம் 1150 | சீட்டிழுப்பு இலக்கம் 0109 | சீட்டிழுப்பு இலக்கம் 2189 | சீட்டிழுப்பு இலக்கம் 5841 | சீட்டிழுப்பு இலக்கம் 1871 | சீட்டிழுப்பு இலக்கம் 0416 |
| ஆங்கில எழுத்து C | வெற்றி இலக்கினம் மீனம் | ஆங்கில எழுத்து C | ஆங்கில எழுத்து J | ஆங்கில எழுத்து L | ஆங்கில எழுத்து X | ஆங்கில எழுத்து A |
| | | | சுப்பர் இலக்கம் 05 | | | |
| வெற்றி இலக்கங்கள் 09 23 45 62 | வெற்றி இலக்கங்கள் 11 30 48 51 | வெற்றி இலக்கங்கள் 5 1 1 7 | வெற்றி இலக்கங்கள் 05 21 50 60 | வெற்றி இலக்கங்கள் 1 1 6 0 4 3 | வெற்றி இலக்கங்கள் 07 40 47 65 | வெற்றி இலக்கங்கள் 6 0 4 3 |
| விசேட எழுத்து C | | | | | விசேட எழுத்து X | |

# மாகாணத் தேர்தலை முடிந்தால் நடத்துங்கள்

## சவால்விடுக்கின்றது மொட்டு

**கொழும்பு, மே 27**

**முடிந்தால் மாகாணசபைத் தேர்தலை விரைவில் நடத்திக்காட்டுங்கள் என்று தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு ஸ்ரீலங்கா பொதுஜன பெரமுனக் கட்சி சவால் விடுத்துள்ளது. மொட்டுக் கட்சித் தலைமையகத்தில் நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பில் முன்னாள் ஆளுநர் லக்ஷ்மன் யாப்பா அபேவர்த்தன இந்தச் சவாலை விடுத்துள்ளார்.**

இது தொடர்பில் அவர் மேலும் தெரிவித்துள்ளதாவது-

அரசாங்கத்தின் செயற்பாடுகளால் அதன் வாக்கு வங்கி சரிந்துவருகின்றது. முடிந்தால் மாகாண சபைத் தேர்தலை நடத்திக் காட்டுங்கள் என்று சவால் விடுக்கின்றோம். வடக்கில் நினைவேந்தல் நடத்த அனுமதிவழங்கப்பட்டுள்ளது. கொழும்பில்கூட நடத்தப்பட்டுள்ளது. ஆனால் படையினருக்குரிய கௌரவத்தை இந்த ஆட்சியாளர்கள் வழங்கவில்லை. நாம் தமிழர்களுக்கு எதிராகப் போர் செய்யவில்லை. நாட்டு மக்களுக்கு வாழ்வதற்குரிய சூழ்நிலை இருக்கவில்லை. எனவே, மக்களைப் பாதுகாப்பதற்காகவே போர் செய்யப்பட்டு, சுதந்திரம் பெறப்பட்டது. இந்த நிலைமையை அரசாங்கம் சீர்குலைக்கக் கூடாது. பொய்களை சமூகமயப்படுத்தியதால் ஏற்படும் பிரதிபலன்களை இந்த அரசாங்கம் விரைவில் உணரும்-என்றார். (ஏ-44)

| சுபிரி தன சம்பத | | | |
|---|---|---|---|
| திகதி 26.05.2025 | தினம் திங்கட்கிழமை | | வெற்றி வாரம் 0549 |
| DLB | ஆங்கில எழுத்து Y | வெற்றி இலக்கம் 2 9 2 4 4 3 | |

| Super Ball DLB | | | |
|---|---|---|---|
| திகதி 25.05.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| சீட்டிழுப்பு வாரம் 2815 | ஆங்கில எழுத்து V | வெற்றி இலக்கம் 13 43 46 72 | |

| சனிதா DLB | | | |
|---|---|---|---|
| திகதி 26.05.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து F | வெற்றி இலக்கம் 10 27 33 54 | வெற்றி வாரம் 4976 | |

| லக்ன ராசி DLB | | | |
|---|---|---|---|
| திகதி 26.05.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| சிம்மம் | வெற்றி இலக்கம் 19 20 25 33 | சீட்டிழுப்பு வாரம் 4527 | |

| KAPRUKA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 26.05.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து S | சுப்பர் இலக்கம் 11 | வெற்றி இலக்கம் 06 28 36 47 | வெற்றி வாரம் 1991 |

| அத கோடிபதி DLB | | | |
|---|---|---|---|
| திகதி 26.05.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து B | வெற்றி இலக்கம் 17 30 32 52 | வெற்றி வாரம் 2641 | |

| JAYODA DLB | | | |
|---|---|---|---|
| திகதி 26.05.2025 | தினம் திங்கட்கிழமை | | |
| ஆங்கில எழுத்து E | வெற்றி இலக்கம் 08 21 29 64 | வெற்றி வாரம் 2129 | |

## அபிவிருத்திக் கூட்டத்துக்காக விசேட படகுச் சேவை

யாழ்ப்பாணம், மே 27

நெடுந்தீவு பிரதேச அபிவிருத்திக் கூட்டம் இன்று செவ்வாய்க்கிழமை பிரதேச செயலக மண்டபத்தில் நடைபெறவுள்ளதால் விசேட படகுச் சேவை ஒழுங்குபடுத்தப்பட்டுள்ளது என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

நெடுந்தீவிலிருந்து மு.ப 6.45 மணிக்கு குமுதினி, மு.ப 7 மணிக்கு நெடுந்தாரகை, பி.ப. 3 மணிக்கு குமுதினி, நெடுந்தாரகை ஆகிய படகுச்சேவைகளும், குறிகாட்டுவானிலிருந்து மு.ப. 8 மணிக்கு குமுதினி, மு.ப. 8.30 மணிக்கு நெடுந்தாரகை, பி.ப 4 மணிக்கு குமுதினி, பி.ப 4.30 மணிக்கு நெடுந்தாரகை ஆகிய படகுச்சேவைகளும் இடம்பெறும் என்று பிரதேச செயலகத்தினர் அறிவித்துள்ளனர். (ஏ-33-125)

## செலவு விவரம் சமர்ப்பிக்கும் அவகாசம் இன்றுடன் நிறைவு

### தவறின் அரசியல் உரிமை இழப்பு

கொழும்பு, மே 27

உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிட்ட வேட்பாளர்கள் இன்று செவ்வாய்க்கிழமைக்குள் தமது செலவு விவரங்களைச் சமர்ப்பிக்காவிட்டால் அவர்கள் தமது அரசியல் உரிமைகளை இழந்துவிடுவார்கள் என ஜனநாயக சீர்திருத்த மற்றும் தேர்தல்கள் தொடர்பான கற்கைகள் நிறுவனப் பணிப்பாளர் மஞ்சுள கஜநாயக்க தெரிவித்துள்ளார்.

உள்ளூராட்சித்தேர்தலில் போட்டியிட்ட 75 ஆயிரத்து 589 வேட்பாளர்களில் 3 ஆயிரத்து 712 பேர் மட்டுமே தமது செலவு விவரங்களைச் சமர்ப்பித்துள்ளனர் என்றும், அந்த விவரங்களைச் சமர்ப்பிக்காவிட்டால் எதிர்காலத்தில் தேர்தலில் போட்டியிடவோ வாக்களிக்கவோ முடியாது எனவும் அவர் தெரிவித்துள்ளார். (ஏ-33-6)

## வடக்கு வந்த வீடமைப்பு அதிகாரசபைத் தலைவர்

கொழும்பு, மே 27

தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகாரசபையின் தலைவர் அரவிந்த சிறிசேன கடந்த 22ஆம் திகதி வவுனியா, மன்னார், யாழ்ப்பாணம், முல்லைத்தீவு ஆகிய மாவட்ட அலுவலகங்களுக்கு நேரில் சென்று ஆராய்ந்தார். அதிகாரசபை மேற்கொள்ளும் இந்திய வீடமைப்புத் திட்டம் முன்னெடுக்கப்படும் வீடமைப்பு வேலைத்திட்டங்கள் தொடர்பாக மாவட்ட முகாமையாளர்கள் மற்றும் அதிகாரிகளுடன் அவர் கலந்துரையாடினார். (ஏ-இ)

## தே.ம.ச. ஆட்சியமைக்க இடமளிப்பதே சிறந்தது

### எஸ்.எம். மரிக்கார் தெரிவிப்பு



கொழும்பு, மே 27

கொழும்பு மாநகரசபை உட்பட தேசிய மக்கள் சக்தி வெற்றிபெற்றுள்ள சபைகளை அந்தக் கட்சியினர் ஆள்வதற்கு இடமளிக்கவேண்டும் என்று ஐக்கிய மக்கள் சக்தியின் பிரதித் தேசிய அமைப்பாளரும், கொழும்பு மாவட்ட நாடாளுமன்ற உறுப்பினருமான எஸ்.எம். மரிக்கார் தெரிவித்துள்ளார்.

இது தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது-

உள்ளூராட்சிசபைத் தேர்தல் முறைமையானது பைத்தியக்காரத்தனமானது. தற்போதுள்ள முறைமை நிச்சயம் மாற்றியமைக்கப்படவேண்டும்.

அதேவேளை, உள்ளூராட்சிசபைகளில்ஆட்சியமைக்கக்கூடிய அனைத்து இடங்களிலும் ஆட்சியமைக்கவேண்டும் என்ற முடிவையே ஐக்கிய மக்கள் சக்தியின் முகாமைத்துவக் குழு எடுத்துள்ளது. எனினும், தேசிய மக்கள் சக்தி வெற்றி பெற்ற சபைகளில் அவர்களுக்கு ஆட்சியமைக்க இடமளிக்க வேண்டும் என்பது எனது தனிப்பட்ட கருத்தாகும். அப்போதுதான் அவர்களின் இயலுமை என்னவென்பதை நாட்டுக்கு வெளிப்படுத்தமுடியும். இது எனது தனிப்பட்ட கருத்தாக இருந்தாலும் கட்சி எடுத்துள்ள முடிவுக்கே கட்டுப்படுவேன். கட்சிக் கட்டமைப்புக்குள் இருக்கும் போது கட்சி முடிவை ஏற்க வேண்டும். அவ்வாறு முடியாவிட்டால் வெளியேற வேண்டும். நான் இடதுசாரி அரசியல்வாதி கிடையாது. அநுர தரப்புடன் இணையவேண்டிய தேவைப்பாடு கிடையாது-என்றார். (ஏ-இ)

## தவிசாளர் பதவியை ஏற்கமறுத்த மாக்கார்

கொழும்பு, மே 27

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியை ஏற்கவேண்டும் என்று விடுக்கப்பட்ட கோரிக்கையை நாடாளுமன்ற முன்னாள் உறுப்பினர், இம்தியாஸ் பாக்கிர் மாக்கார் மீண்டும் நிராகரித்துள்ளார்.

ஐக்கிய மக்கள் சக்தியின் தவிசாளர் பதவியிலிருந்து இம்தியாஸ் பாக்கிர் மாக்கார், கடந்த நாடாளுமன்றத் தேர்தலின் பின்னர் விலகியிருந்தார். எனினும், அவரது பதவி விலகல் கடிதத்தை கட்சித் தலைவர் சஜித் பிரேமதாஸ ஏற்றுக்கொள்ளவில்லை.

இந்தநிலையில் சஜித்தின் சமரசக் குழுவொன்று, இம்தியாஸை சந்தித்து ,தவிசாளர் பதவியை ஏற்கவேண்டும் என்று அழைப்பு விடுத்துள்ளது. அந்த அழைப்பை அவர் நிராகரித்துள்ளார் எனத் தெரி[illegible]

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இலங்கை மீதான வரிவிதிப்பு: இரண்டாம்கட்டப் பேச்சு நாளை

கொழும்பு, மே 27

**இலங்கை மீது விதிக்கப்பட்டுள்ள தீர்வைவரி தொடர்பாக நாளையும், நாளைமறுதினமும் அமெரிக்காவின் வொஷிங்டன் நகரில் கலந்துரையாடல்கள் நடைபெறவுள்ளன.**

இந்தக் கலந்துரையாடலில் பங்கேற்பதற்காக நிதி மற்றும் திட்டமிடல் பிரதி அமைச்சர் ஹர்ஷன சூரியப்பெரும தலைமையிலான குழு பயணமாகியுள்ளது. இலங்கைக்கும், அமெரிக்காவுக்கும் இடையிலான தொடர்ச்சியான இராஜதந்திர ஈடுபாடு மற்றும் பொருளாதாரப் பேச்சுவார்த்தையின் இரண்டாவது சுற்றுக் கலந்துரையாடலாக இது அமையவுள்ளது.

அமெரிக்க ஜனாதிபதியால் இலங்கை ஏற்றுமதிக்கு விதிக்கப்பட்ட 44 வீத வரி தற்போது 90 நாள்களுக்கு இடைநிறுத்தப்பட்டுள்ளநிலையில், வரி விதிப்பிலிருந்து நிவாரணம் பெறுவதற்காக இலங்கை பேச்சுகளை முன்னெடுத்து வருகின்றது. (எ-இ)




**கா**ஸ்சோடாமாதிரித்தான் எங்கடையாக்களும். எல்லாத்துக்கும் உடன பொங்குவினம், அப்பிடிப் பொங்கின வேகத்திலயே பட்டெண்டு அடங்கியும் போடுவினம். நல்லூருக்கு முன்னால மச்சச் சாப்பாட்டுக்கடை போட்டாச்சு எண்டதும், எல்லாரும் வேட்டியை மடிச்சுக் கட்டிக்கொண்டு, பனரைப் பிடிச்சபடி போராட வந்திட்டினம். அவையின்ர ஆவேசத்துக்கு அப்பிடியே விட்டிருந்தால், அந்தக் கடையையே அடிச்சு நொருக்கியிருப்பினம். ஆனால் நல்ல காலத்துக்கு அப்பிடி ஒண்டும் நடக்கேலை. ஆனால் அந்தப் போராட்டத்தாலதான் அந்த மச்சக்கடை இருந்த கட்டடம், வீட்டுக்குப் பிளான் குடுத்திட்டு அதை மாத்தி கடையாக் கட்டியிருக்கினம் எண்ட விசயம் வெளியில வந்தது. தங்கட ஒப்பீஸுக்கு முன்னால இப்பிடி ஒரு கட்டடம் அனுமதி இல்லாமல் கட்டுப்பட்டதை கண்டு கொள்ளாமல் இருந்திட்டமே எண்ட குற்றவுணர்விலையோ, இல்லாட்டிச் சனங்களின்ர கோபமெல்லாம் தங்கட பக்கம் திரும்பிட்டுதே எண்ட பயத்திலையோ என்னவோ அந்தக் கடையின்ர பெயர்ப் பலகையை மாநகரசபைக்காரர் பிடுங்கிட்டினம்.

அந்தக் கடையை அதில இருந்து எடுக்காட்டி, இன்னும் போராட்டம் நடக்கும் எண்டு நாலுபக்கத்தாலையும் அறிக்கையள் வெளிவந்ததால, 'சனத்தைப் பகைச்சுக்கொண்டு கடையை வைச்சிருந்தால் கல்லா கட்டாது' எண்டு கடைக்காரருக்கு விளங்கினதால, முந்தநாளில இருந்து திடீரெண்டு ' இஞ்ச சைவச் சாப்பாடு மட்டும் பரிமாறுவம்' எண்டு பச்சைக் கலரில பெரிசா அச்சடிச்சு முன்னுக்கு வைச்சிட்டினம். அப்பிடி ஒரு அறிவிப்பைக் கண்டதும் எங்கட ஆக்கள் ஏதோ தமிழீழமே கிடைச்சமாதிரி 'இதுதான் எங்கட போராட்டத்தின்ர வெற்றி' எண்டு தொங்கிக் குதிக்க வெளிக்கிட்டிட்டினம். இனி போராட்டமும் இல்லை, பனரும் இல்லை. ஆரெல்லாம் அந்தக் கடைக்கு எதிராப் போராடிச்சினமோ அவையள்தான் முண்டியடிச்சுக்கொண்டு அங்கபோய், காசை அள்ளிக்குடுத்து சாப்பிடப்போகினம். அதோட 'எங்கட போராட்டத்தை மதிச்சு, சைவத்துக்கு மாறின கடைக்கு நன்றி' எண்டு எல்லாரும் அந்தக் கடைக்கு இலவச விளம்பரமும் பேஸ்புக்கில செய்து கொண்டிருக்கினம்.

இப்பிடித்தான் கொஞ்சக்காலத்துக்கு முதல் கோண்டாவிலில கோயிலுக்கு முன்னால பீட்சாக் கடையொண்டு திறந்ததுக்கு எங்கட ஆக்கள் பொங்கியெழும்பினவை. ஆனால் அங்கையும் 'நாங்கள் மச்சப் பீட்சா குடுக்கமாட்டம், இஞ்ச சைவப் பீட்சா மட்டும்தான்' எண்டு அவையள் சொல்ல, போராட வெளிக்கிட்டவை எல்லாரும் அடங்கிட்டினம். ஆனால் மருந்தும் விருந்தும் கொஞ்சநாளைக்குத் தானே. அதுக்குப் பிறகு மெல்ல மெல்ல மச்சப் பீட்சாவும் அங்க செய்துகுடுக்கத்தொடங்கிட்டினம். இருந்து பாருங்கோ, உந்தக் கடையும் இந்த முறை நல்லூர்த்திருவிழா முடிஞ்சபிறகு மச்சக் கடையா மாறலாம். எல்லாரும் உந்த மச்சம், சைவம் எண்ட பிரச்சினையில, அந்தக் கடை கட்டினது சரியா? அனுமதி எடுத்தவையா? அனுமதி இல்லாட்டி வழக்குப் போட்டவையா? எண்டதையெல்லாம் மறந்தும் போனம் கண்டியளோ.

padsi@uthayan.com - பட்சி

## விவசாய மேம்பாட்டுக்கு இஸ்ரேல் உதவி

கொழும்பு, மே 27

இலங்கையில் விவசாய உற்பத்தியை மேம்படுத்துவதற்கு உதவ இஸ்ரேல் முன்வந்துள்ளது. விவசாய அமைச்சர் லால்கந்தவுக்கும் இஸ்ரேலியத்தூதுவருக்குமிடையேயான சந்திப்பின்போதே இஸ்ரேலியத்தூதுவர் இந்த விடயத்தைத் தெரிவித்துள்ளார். இஸ்ரேல் 32 திட்டங்களுக்கு உதவ முன்வந்துள்ளதுடன் திட்ட முன்மொழிவுகளையும் கோரியுள்ளது. விவசாயத்தை நவீனமயப்படுத்துவதன் மூலம் இளைஞர்களுக்கு விவசாய செய்கையில் ஆர்வத்தை ஏற்படுத்தலாம் என்று அமைச்சர் லால்கந்த சுட்டிக்காட்டியுள்ளார். (எ-336)

## இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகம் டிசெம்பர் மாதம்

கொழும்பு, மே 27

இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகப் பணிகள் டிசெம்பர் மாதம் ஆரம்பிக்கப்படும் என்று பொதுப்பாதுகாப்பு அமைச்சர் ஆனந்த விஜயபால தெரிவித்துள்ளார்.

இலத்திரனியல் கடவுச்சீட்டு விநியோகத்துக்கு சட்டமா அதிபரின் அனுமதிகிடைத்துள்ளது. முன்னாள் ஜனாதிபதி ரணில் ஒப்பந்தம் செய்துகொண்ட நிறுவனத்திடம் கடவுச்சீட்டு அச்சிடும் பணிகள் ஒப்படைக்கப்பட்டுள்ளன. தற்போது தினசரி 4 ஆயிரம் கடவுச்சீட்டுகள் விநியோகிக்கப்பட்டுவருகின்றன. தற்போது கடவுச்சீட்டு விநியோகப்பணிகள் வழமைக்குத் திரும்பிக்கொண்டிருப்பதால் 24 மணிநேர சேவை விரைவில் முடிவுக்குக்கொண்டுவரப்படும் எனவும் அவர் மேலும் தெரிவித்துள்ளார் . (எ-33-6)



## சிறைச்சாலை மருத்துவமனையில் துமிந்த சில்வா

கொழும்பு, மே 27

தங்கமுலாம் பூசப்பட்ட துப்பாக்கி தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ள முன்னாள் அமைச்சர் துமிந்த திசாநாயக்க, சிறைச்சாலை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளார்.

நீதிமன்ற உத்தரவைத் தொடர்ந்து அவர் மருத்துவப் பரிசோதனைக்காக சிறை மருத்துவமனையில் சேர்க்கப்பட்டார் என்று சிறைச்சாலை வட்டாரங்கள் தெரிவிக்கின்றன.


இந்தச் சம்பவம் தொடர்பாகக் கைதுசெய்யப்பட்டுள் துமிந்த சில்வா, நாளை மறுதினம் 29 ஆம் திகதிவரை விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளார். (எ-இ)

## கட்டுநாயக்கவில் இலத்திரனியல் கதவுகள்

கொழும்பு, மே 27

கட்டுநாயக்க விமானநிலையத்தில் ஜப்பானிய அரசின் உதவியுடன் உள்வருகை, வெளிச்செல்கைப் பகுதிகளில் இலத்திரனியல் கதவுகள் பொருத்தப்படவுள்ளன என்று துறைமுகங் கள், கப்பல் மற்றும்விமானபோக்குவரத்து பிரதியமைச்சர் ஜனித ருவான் கொடித்துவக்கு தெரிவித்துள்ளார்.

இது தொடர்பான உயர்மட்ட இறுதிக் கலந்துரையாடலில், இலத்திரனியல் கதவுகள் பொருத்துவதற்கான தீர்மானம் எட்டப்பட்டுள்ளது என்றும், இதன் ஊடாக பாதுகாப்பு வலுப்படுத்தப்படுவதுடன், பயணிகள் தொடர்பான விடயங்களை இலகுபடுத்த முடியும் என்றும் அவர் தெரிவித்துள்ளார். (எ-33-6)



## மஹிந்தானந்தவுக்கு மன்று பிணை அனுமதி

கொழும்பு, மே 27

முன்னாள் விவசாய அமைச்சர் மஹிந்தானந்த அளுத்கமகேக்கு கொழும்பு நீதவான் நீதிமன்றம் நேற்று பிணை அனுமதி வழங்கியது.

2021ஆம் ஆண்டு விவசாய அமைச்சராகப் பதவிவகித்தபோது, தரமற்ற உர இறக்குமதிக்காக சீன நிறுவனத்துக்கு பணம் செலுத்தியமை தொடர்பாக மஹிந்தானந்த அளுத்கமகே கைதுசெய்யப்பட்டு விளக்கமறியலில் வைக்கப்பட்டிருந்தார். நேற்று இந்த வழக்கு விசாரணைக்கு எடுக்கப்பட்டபோது, நீதிமன்றம் பிணையில் செல்ல அவருக்கு அனுமதிவழங்கியுள்ளது. (எ-இ)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org



# இன்றைய (ராசிபலன்)

**மேடம்:** இன்று புதிய முயற்சிகளில் ஈடுபடவேண்டாம். குடும்பத்தில் உறவினர்களால் சில பிரச்சினைகள் ஏற்படக்கூடும் என்பதால், பொறுமையைக் கடைப்பிடிக்கவும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே சிறிய அளவில் கருத்துவேறுபாடு ஏற் பட்டு நீங்கும்.

**இடபம்:** வாழ்க்கைத்துணைவழியில் செலவுகள் ஏற்படும். போதுமான பணம் இருப்பதால் சமாளித்து விடுவீர்கள். நேரத்துக்குச் சாப்பிடமுடியாதபடி ஒன்று மாற்றி ஒன்று ஏதேனும் வேலை இருந்தபடியிருக்கும். மற்றவர்களுடன் மனஸ்தாபம் ஏற்படக்கூடும் என்பதால், பேசும் வார்த்தைகளில் கவனம் தேவை.

**மிதுனம்:** இன்று நீங்கள் தொடங்கும் புதிய முயற்சி சாதகமாகமுடியும். உங்களுடைய முயற்சிக்கு வாழ்க்கைத்துணை பக்கபலமாக இருப்பார். தந்தைவழி உறவினர்களால் ஆதாயம் உண்டாகும். பிள்ளைகளுக்காக செலவுசெய்ய நேரிடும்.

**கடகம்:** தந்தையின் தேவையை நிறைவேற்றுவீர்கள். பிள்ளைகளால் பிரச்சினை ஏற்படக்கூடும். நண்பர்களால் ஆதாயம் கிடைக்கும். காரியங்கள் அனுகூலமாக முடியும். உறவினரிடம் எதிர்பார்த்த உதவி கிடைக்கும். உடல் ஆரோக்கியம் மேம்படும்.

**சிம்மம்:** தாய்வழி உறவுகளால் செலவுகள் ஏற்படும். பிள்ளைகள் கேட்டதை வாங்கிக்கொடுப்பீர்கள். ஆனால் உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை. பிற்பகலுக்கு மேல் தொடங்கும் முயற்சி சாதகமாக முடியும். மாலையில் பிள்ளைகளுடன் கலந்து பேசி முக்கிய முடிவு ஒன்று எடுப்பீர்கள்.

**கன்னி:** எதிர்பாராத செலவுகளும் ஏற்படக்கூடும். உறவினர்களால் ஓரளவு அனுகூலம் ஏற்பட்டாலும், அவர்களால் பிரச்சினைகளும் ஏற்படக்கூடும். மாலையில் உறவினர்கள் மற்றும் நண்பர்கள் தொடர்புகொண்டு பேசுவது மகிழ்ச்சி தரும். உடல் ஆரோக்கியத்தில் கவனம்தேவை.

**துலாம்:** குடும்பம் தொடர்பான முக்கிய முடிவுகளை இன்று எடுக்கலாம். இளைய சகோதரவகையில் செலவுகள் ஏற்படும். தாயாரின் உடல்நலனில் கவனம்தேவை. கணவன் மனைவிக்கிடையே ஏற்பட்டிருந்த பிணக்குகள் நீங்கும்.

**விருச்சிகம்:** குடும்பத்தினரின் தேவைகளை நிறைவேற்றுவீர்கள். நண்பர்கள் கேட்கும் உதவியை மகிழ்ச்சியுடன் செய்துகொடுப்பீர்கள். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். சகோதரர்களிடம் நீண்ட நாள்களாக எதிர்பார்த்த காரியம் அனுகூலமாகமுடியும்.

**தனுசு:** உற்சாகமாகக் காணப்படுவீர்கள். எதிர்பாராத பணவரவுக்கும் வாய்ப்பு உண்டு. ஆனாலும், புதிய முயற்சிகளில் ஈடுபட வேண்டாம். வாழ்க்கைத்துணையால் ஆதாயம் உண்டாகும். கணவன் மனைவிக்கிடையே கருத்தொற்றுமை ஏற்படும்.

**மகரம்:** தேவையான பணம் கையில் இருந்தாலும், தேவையற்ற செலவுகளும் ஏற்படக்கூடும். வெளியில் செல்ல நேரிட்டால் நன்றாக திட்டமிட்டுக்கொண்டு கவனமாக செல்லவும். தாயின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள்.

**கும்பம்:** சிலருக்கு எதிர்பாராத பணவரவுக்கும் திடீர்ச்செலவுகளுக்கும் வாய்ப்பு உண்டு. பிள்ளைகளின் பிடிவாதப்போக்கு மாறி, உங்கள் அறிவுரைப்படி செயற்படுவார்கள். வியாபாரத்தில் புதிய முதலீடுகள் விஷயத்தில் சிந்தித்து ஈடுபடவும்.

**மீனம்:** எடுத்த காரியங்களில் வெற்றி உண்டாகும். மனதில் உற்சாகம் பெருக்கெடுக்கும். பிள்ளைகளால் மகிழ்ச்சி உண்டாகும். வாழ்க்கைத்துணை நீங்கள் கேட்டதை மறுப்பின்றி வாங்கித்தருவார். தந்தையின் விருப்பத்தை நிறைவேற்றுவீர்கள். சகோதரர்கள் உதவிகேட்டு வருவார்கள்.

### இந்தியா - பாகிஸ்தான் மோதலின்போது

# இலங்கைக்குள் நுழைந்த சீனாவின் ஆய்வுக்கப்பல்

## பிராந்தியத்தில் பரபரப்புத் தகவல்

**கொழும்பு, மே 27**

**இந்தியாவுக்கும் பாகிஸ்தானுக்கும் இடையிலான மோதலின்போது, சீனாவின் 'டா யாங் யி ஹாவோ' என்ற ஆய்வுக் கப்பல் எந்த அனுமதியையும் பெறாது இலங்கைக்குள் நங்கூரமிட்டதாகக் கொழும்பு ஊடகங்கள் செய்தி வெளியிட்டுள்ளன.**



சீனக்கப்பல் இந்தியாவுக்கு நெருக்கமாக, இலங்கைக் கடற்பரப்பில் நங்கூரமிட்டுள்ள செய்தியை அறிந்து, இந்தியா தனது கடற்பாதுகாப்பை உடனடியாக அதிகரித்துள்ளது. இதைத் தொடர்ந்து, இலங்கையிடம் இது தொடர்பில் கேட்டபோதே, 'அந்தக் கப்பல் அனுமதிபெறாமல் நங்கூரமிட்டுள்ளது' என இலங்கையால் இந்தியாவிடம் தெரிவிக்கப்பட்டதுடன், அதன்பின்னர் கப்பல் இலங்கைக் கடற்பரப்பைவிட்டு அகன்றுசென்றுள்ளது.

சர்ச்சைக்குரிய அந்தக் கப்பல் தற்போது இலங்கையின் கடல் எல்லைக்கு அப்பால் நங்கூரமிடப்பட்டுள்ளதாகவும், அது அரபிக் கடலை நோக்கி நகர வாய்ப்புள்ளதாகவும் கருதப்படுகின்றது.

கடல்சார் ஆய்வுகளுக்குப் பெயர்போன இந்தக் கப்பலில் வலுவான இராணுவ உபகரணங்களும் உள்ளன என்று சர்வதேச ஊடகங்கள் அண்மையில் செய்தி வெளியிட்டிருந்தமை குறிப்பிடத்தக்கது. (ம)

# யாழ். மாவட்டப் பதில் செயலருடன் உலக வங்கிக் குழுவினர் சந்திப்பு



யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாண மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபனை உலக வங்கிக் குழுவினர் சந்தித்துக் கலந்துரையாடினர்.

கலந்துரையாடலில் விவசாயம், மீன்பிடி மற்றும் கைத்தொழில் போன்ற துறைகளின் தற்போதைய நிலவரங்கள், வாழ்வாதாரத்துறைகளுக்கான தேவைப்பாடுகள், உள்ளூர் உற்பத்திகளுக்கான ஏற்றுமதி சந்தைவாய்ப்புகள், யாழ்ப்பாண மாவட்டத்துக்கான சுற்றுலாத்துறை அபிவிருத்தி, பெண் தலைமைத்துவக் குடும்பங்களுக்கான நிலையான வாழ்வாதார அபிவிருத்தி தொடர்பான கோரிக்கைகள், தெல்லிப்பழை காங்கேசன்துறையில் 351 ஏக்கரில் கைத்தொழில் வலயமாக பிரேரிக்கப்பட்ட பகுதியில் எதிர்கால முதலீடு மற்றும் அச்சுவேலி கைத்தொழில் பேட்டையின் அபிவிருத்தி, அதற்கான தொழில்வாய்ப்புகளுக்கான தேவைப்பாடுகள், பலாலி சர்வதேச விமான நிலையத்தைச் சர்வதேச தரத்துக்கு உயர்த்தவேண்டிய தேவைப்பாடுகள் மற்றும் காங்கேசன் துறைமுக அபிவிருத்தி ஆகியவை தொடர்பில் யாழ். மாவட்டப் பதில் செயலர் எடுத்துரைத்தார். (ச-33-27,125-66)

# இலங்கையின் கராத்தே தோ சம்மேளத்தின் ஆண்டுவிழா முல்லைத்தீவில்

முல்லைத்தீவு, மே 27

இலங்கையின் கராத்தே தோ தற்காப்புக் கலை ஆரம்பிக்கப்பட்டு 50 ஆவது ஆண்டு நிறைவு நிகழ்வுகள் முல்லைத்தீவு மாவட்ட கராத்தே சம்மேளனத்தின் ஏற்பாட்டில் புதுக்குடியிருப்பு மத்தியகல்லூரி மைதானத்தில் நேற்றுமுன்தினம் நடைபெற்றது. இதன்போது, முல்லைத்தீவு மாவட்டத்தில் பதிவுசெய்யப்பட்ட 9 தற்காப்புக் கலை பயிற்சிநிலையங்களைச் சேர்ந்த 400 வரையான மாணவர்கள் தற்காப்புக் கலையின் செயல்விளக்கத்தினை செய்து காண்பித்தனர். (ம-9)



# காற்பந்தாட்ட பயிற்சிமுகாம்

முல்லைத்தீவு, மே 27

553ஆவது இராணுவப் படைப்பிரிவினரின் ஏற்பாட்டில் கிளிநொச்சி மற்றும் முல்லைத்தீவு மாவட்டங்களைச் சேர்ந்த தெரிவுசெய்யப்பட்ட 9 பாடசாலை மாணவர்களுக்கான காற்பந்தாட்டப் பயிற்சிமுகாம் முல்லைத்தீவு விசுவமடு மகாவித்தியாலயத்தில் கடந்த வெள்ளிக்கிழமையும், நேற்றுமுன்தினம் சனிக்கிழமையும் நடைபெற்றன. (ம-41,113)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

உதயன்
மக்கள் மனம் நிறைந்த தமிழ் நாளிதழ்
உண்மை - நேர்மை - அஞ்சாமை

# சுயபரிசீலனையின் அவசியம்!

தமிழ்த்தேசியக் கட்சிகளின் அரசியற்தலைவர்கள், 'தமிழ் ராஜபக்சக்கள்' போன்று நடந்துகொள்கின்றனர் என்று தனது அதிருப்தியைப் பதிவுசெய்துள்ளார் சபை முதல் வரும் அமைச்சருமான பிமல் ரத்நாயக்க. தமிழ் அரசியற் தலைவர்களிடம் இத்தகைய இனவாத முகத்தை தான் ஒருபோதும் எதிர்பார்க்கவில்லை என்றும் அவர் நொந்துகொண்டுள்ளார். ஜனாதிபதி அநுர தலைமையிலான தேசிய மக்கள் சக்தியின் செயற் பாடுகளைத் தமிழ்த்தேசியக் கட்சிகள் தொடர்ச்சியான விமர்சனங்களுக்கு உட்படுத்திவரும் நிலையிலேயே, அமைச்சர் பிமலின் இத்தகைய கருத்துகள் பதிவாகியுள்ளன.

தமிழ்க்கட்சிகள் மீதானதும், அவற்றின் தலைவர்கள் மீதானதுமான அமைச்சர் பிமலின் விமர்சனங்கள் ஒரு புறம் இருக்கட்டும். 'ராஜபக்சக்களைப் பழித்துரைத்து - விமர்சித்து, தங்களை சிறுபான்மை மக்களின், குறிப்பாகத் தமிழர்களின் மீட்பர்களாகக் காண்பித்து ஆட்சிக்கு வந்த தேசிய மக்கள் சக்தியினரின் செயற்பாடுகள் தற்போது எத்தகைய பாதையில் சென்றுகொண்டிருக்கின்றன?' என்று வினவவேண்டியிருக்கின்றது. 2009ஆம் ஆண்டு இறுதிப்போரின்போது தமிழர்களுக்கு எதிராக இனப்படுகொலை நிகழவில்லை என்பது ராஜபக்சக்களின் நீண்டநாள் வாதம். அதை எண்பிப்பதற்காக தலையால், கிடங்குகிண்டாத குறையாகராஜபக்சக்கள் முயன்றுகொண்டிருக்கின்றனர். எனவே, தேசிய மக்கள் சக்தியினர் ஆட்சிக்கு வந்தபோது, ராஜபக்சக்களின் இனப்படுகொலைகளுக்கு எதிராகக் காத்திரமான நடவடிக்கைகள் இடம்பெறும் என்று தமிழர்கள் எண்ணினார்கள். ஆனால் நடந்தது என்ன? இனப்படுகொலைகள் இடம்பெறவில்லை என்று அறிவித்தது போதாதென்று, 'இனப்படுகொலைகள் இடம்பெற்றது என எவராவது கருத்துக் கூறினால், அவர்கள் தண்டிக்கப்படுவார்கள்' என்பதே தேசிய மக்கள் சக்தியின் நிலைப்பாடாகப் பதிவானது. இந்த ஒற்றை அறிவிப்பின்மூலம், தாம் ராஜபக்சக்களை விடவும் கடைகெட்ட பேர்வழிகள் என்பது தேசிய மக்கள் சக்தியினருக்கு - குறிப்பாக அமைச்சர் பிமலுக்குப் புரியவில்லையா?

'சிங்கள மக்களுக்கு இத்தனை துன்பங்களைச் செய்தவர்கள், தமிழ் மக்களை என்னவெல்லாம் செய்திருப்பார்கள் என எண்ணிப்பாருங்கள்' என்று பட்டலந்த வதைமுகாம் தொடர்பான நாடாளுமன்ற விவாதத்தில் அமைச்சர் பிமல் ரத்நாயக்க சுட்டிக் காட்டியிருந்தார். அவருடைய அன்றைய கருத்தில் ஒரு நேர்மையும், தமிழர்களுக்கான நம்பிக்கையும் வெளிப்பட்டது. எனவே அமைச்சர் பிமல் தனது இந்தக் கருத்துக்கும், 'இலங்கையில் இனப்படுகொலை இடம்பெறவில்லை. அவ்வாறு இடம்பெற்றது என எவராவது கூறினால் அவர்களுக்கு எதிராகக் கடும் நடவடிக்கை எடுக்கப்படும்' என்று வெளிப் படுத்தப்பட்டுள்ள அமைச்சர் விஜித ஹேரத்தின் கருத்துக்கும் இடையிலான வேறுபாட்டை விளக்க வேண்டும். இந்தக் கருத்துகள்மூலம் தாங்கள் சொல்ல வருகின்ற செய்தி என்ன? என்ற புரிதலை மக்களிடத்தில் ஏற்படுத்த வேண்டும்.


தமிழ்க்கட்சியினர் இனவாதத்தை வெளிப்படுத்தினால், அது நிச்சயமாகக் கண்டிக்கப்படவேண்டியதே. ஆனால், எதிர்க்கட்சியின் மனோநிலையில் இருந்து எல்லாவற்றையும் விமர்சிக்கும் அரச தரப்பினர், அவ்வப்போது சுயபரிசீலனையிலும் ஈடுபடவேண்டும். சுயபரிசீலனை அற்ற விமர்சனங்கள் உப்பில்லாப் பண்டம் போன்றவை. உப்பின் அருமை இப்போது அரசாங்கத்துக்குத் தெரிந்திருக்கும்தானே!

செய்தி : 021 493 0000
விளம்பரம் : 021-493 1111
செய்தி : news@uthayan.com
விளம்பரம் : advt@uthayan.com

நாளொரு நல்வார்த்தை

நமக்கு தாய் தந்தை வாய்ப்பது விதி,
நண்பர்கள் வாய்ப்பதோ மதி.

– ஷெல்லி –






## மீண்டும் உயரும் விலைகள் நுகர்வோர் முன்னணி விசனம்

கொழும்பு, மே 27

நாட்டில் உப்புக்குத் தட்டுப்பாடு நிலவும் நிலையில், தற்போது மீண்டும் தேங்காய் விலை அதிகரித்துவருகின்றது என்று நுகர்வோர் முன்னணி குற்றஞ்சாட்டியுள்ளது.

தற்போது நாட்டின் பல பாகங்களில் தேங்காய் 250 ரூபா வரையில் விற்பனைசெய்யப்படுகின்றது என்று அந்த முன்னணியின் தலைவர் அசேலசம்பத் சுட்டிக்காட்டியுள்ளார். கொழும்பில் ஊடகங்களுக்குக் கருத்துத் தெரிவித்த அவர், நாட்டில் தற்போது உப்புக்குத் தட்டுப்பாடு நிலவுகின்றது. அதேநேரம் தேங்காயின் விலை மீண்டும் அதிகரிக்க ஆரம்பித்திருக்கின்றது. இதனால் நுகர்வோர் பெரும் சிரமங்களை எதிர்கொண்டுள்ளனர் என்று தெரிவித்துள்ளார். (எ-இ)

## சுற்றுலாப் பயணிகள் வருகை அதிகரிப்பு

கொழும்பு, மே 27

இந்த வருடத்தின் இதுவரையான காலப்பகுதியில் 9 இலட்சத்து 88 ஆயிரத்து 669 சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது.

இந்த மாதத்தின் முதல் 21 நாள்களில் மட்டும் 91 ஆயிரத்து 785 சுற்றுலாப்பயணிகள் வந்துள்ளனர். இந்தியாவில் இருந்தே அதிகளவான சுற்றுலாப்பயணிகள் வந்துள்ளனர். பிரிட்டனில் இருந்து 6 ஆயிரத்து 195 சுற்றுலாப்பயணிகளும், சீனாவில் இருந்து 6 ஆயிரத்து 43 சுற்றுலாப்பயணிகளும், ஜேர்மனியில் இருந்து 5 ஆயிரத்து 526 சுற்றுலாப்பயணிகளும் வந்துள்ளனர். சீனா, அவுஸ்திரேலியா, பங்களாதேஷ் மற்றும் பிரான்ஸ் உள்ளிட்ட நாடுகளில் இருந்தும் குறிப்பிடத்தக்க அளவிலான சுற்றுலாப்பயணிகள் நாட்டுக்கு வந்துள்ளனர் என்று சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபை தெரிவித்துள்ளது. (எ-இ)

## கொட்டாஞ்சேனை துப்பாக்கிச்சூடு மூவர் கைது




கொழும்பு, மே 27

கொழும்பு, கொட்டாஞ்சேனையில் கடந்த 18ஆம் திகதி நடத்தப்பட்ட துப்பாக்கிச் சூட்டுச் சம்பவம் தொடர்பில் 3 பேர் கைதுசெய்யப்பட்டுள்ளனர். கைதுசெய்யப்பட்டவர்களில் துப்பாக்கிதாரி பயணித்த மோட்டார் சைக்கிளைச் செலுத்திச் சென்றவரும் உள்ளடங்குகின்றார் என்று பொலிஸார் தெரிவித்தனர். கடை ஒன்றில் இருந்தவர்கள்மீது நடத்தப்பட்ட இந்தத் துப்பாக்கிச்சூட்டில் ஒருவர் காயமடைந்து மருத்துவமனையில் சிகிச்சை பெற்று வருகின்றார். (எ-இ)

## கல்வியமைச்சு வளாகத்தில் ஆசிரியர் குழு போராட்டம்!

கொழும்பு, மே 27

பல்வேறு கோரிக்கைகளை முன்வைத்து பத்திரமுல்லவில் உள்ள கல்வி அமைச்சு வளாகத்துக்குள் ஆசிரியர் குழுவொன்று நேற்று ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டது. ஆர்ப்பாட்டத்தில் ஈடுபட்டவர்கள் பிரதான அலுவலகத்துக்குள் செல்ல முயன்ற நிலையில் அங்கிருந்த பாதுகாப்பு அதிகாரிகள் அவர்களைத் தடுத்துநிறுத்தினர். இந்தப் போராட்டம் காரணமாக கல்வி அமைச்சு வளாகத்தில் நேற்றுப் பதற்றமான நிலைமை ஏற்பட்டது. (எ-இ)



## இராணுவ முகாம்களில் நலன்புரிப் பிரிவு ஆரம்பம்

கொழும்பு, மே 27

நாட்டின் அனைத்து இராணுவ முகாம்களிலும் நேற்று முதல் இராணுவச் சிப்பாய்கள் நலன்புரிப் பிரிவொன்று நிறுவப்படும் என இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது.

இதன்மூலம், ஓய்வுபெற்ற, அங்கவீனமுற்ற மற்றும் உயிரிழந்த இராணுவச் சிப்பாய்களின் குடும்பங்களுக்கான நலன்புரி நடவடிக்கைகள் எளிதாக்கப்படும் எனவும் இராணுவத் தலைமையகம் தெரிவித்துள்ளது. (எ-இ)

நாளை
புதன்கிழமை- வைகாசி 14
28.05.2025
சுபநேரம் : 04.22- 05.52
ராகுகாலம் : 11.52 - 01.22

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# வடக்கு விவசாய உற்பத்திகளை முடிவுப்பொருள்களாக்கத் திட்டம்

## வடக்கு ஆளுநர் தெரிவிப்பு

**யாழ்ப்பாணம், மே 27**

**வடக்கு விவசாய உற்பத்திப்பொருள்கள் தற்போது மூலப்பொருள்களாகவே தென்பகுதிக்குச் செல்கின்றன. அவற்றை முடிவுப்பொருள்களாக மாற்றி ஏற்றுமதிசெய்வதற்கான நடவடிக்கைகள் முன்னெடுக்கப்பட்டுள்ளன என்று வடக்கு மாகாண ஆளுநர் நா.வேதநாயகன் தெரிவித்துள்ளார்.**

வடக்கு மாகாண ஆளுநருக்கும், ஐ.நா.வின் தொழில் மேம்பாட்டு நிறுவனத்தின் பிரதிநிதிகளுக்கும் இடையிலான சந்திப்பு ஆளுநர் செயலகத்தில் நடைபெற்றது. அதில் கருத்துத் தெரிவித்தபோதே வடக்கு ஆளுநர் மேற்கண்டவாறு தெரிவித்துள்ளார்.

வடக்கு மாகாணத்தில் விவசாயம் மற்றும் மீன்பிடி ஆகிய இரண்டும் மிக முக்கியமானவை. அவற்றைப் பெறுமதிசேர் பொருள்களாக மாற்றுவதில் சவால்கள் காணப்படுகின்றன. விலைத்தளம்பலால் விவசாயிகள் பாதிக்கப்படுகின்றனர். அதனால் கால ஓட்டத்தில் அவர்கள் விவசாயத்தைக் கைவிடுகின்றனர். சில சந்தர்ப்பங்களில் விவசாயிகளின் உற்பத்திப்பொருள்களின் விலையைவிட இறக்குமதிசெய்யப்பட்ட பொருள்களின் விலை குறைவாக இருப்பதால் விவசாயிகளுக்கு பாதிப்பு ஏற்படுகின்றது. எதிர்காலத்தில் இத்தகைய நிலைமையைத் தவிர்ப்பதற்காக வடக்கு மாகாணத்தில் எந்தக்காலத்தில் எந்த உற்பத்திப்பொருள் என்ன அளவில் உற்பத்தி செய்யப்படும் என்ற விவரக்கொத்தை தயாரிக்கவேண்டும் என்று அதிகாரிகளுக்குப் பணிக்கப்பட்டுள்ளது. அதன்மூலம் இறக்குமதி வரியை அதிகரிப்பதற்கான நடவடிக்கையை எடுப்பதற்கு திட்டமிடப்படுகின்றது என்று சுட்டிக்காட்டினார்.

வடக்கில் அமைக்கத் திட்டமிடப்பட்டுள்ள முதலீட்டு வலயங்களில் உருவாகவுள்ள தொழிற்சாலைகள் தொடர்பாகவும், அதற்கான ஆளணிகள் தொடர்பாகவும் யுனிடோ நிறுவனத்தினர் கேட்டறிந்தனர். விவசாயிகளுக்கு விவசாய உற்பத்திப்பொருள்களுக்கான சிறந்த தரநிலைப்படுத்தப்பட்ட நடைமுறைகள் திட்டம் தொடர்பான பயிற்சிகளை வழங்கத் தயார் என்று யுனிடோ நிறுவனத்தினர் ஆளுநருக்குத் தெரியப்படுத்தினர். (எ-113)



# ஆசிய விஞ்ஞானிகள் பட்டியலில் ரவிராஜன்

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழகத்தின் சிரேஷ்ட பௌதிகவியல் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன், சிங்கப்பூரிலிருந்து வெளியிடப்படும் 'ஆசிய விஞ்ஞானி' எனும் முன்னணிச் சஞ்சிகையின் தலைசிறந்த ஆசிய விஞ்ஞானிகள் நூறு பேரின் பட்டியலில் இடம்பெற்றுள்ளார்.


ஆண்டுதோறும் வெளியிடப்படும் இந்தப் பட்டியல் ஆசியாவிலுள்ள தலைசிறந்த விஞ்ஞானிகளின் விசேட சாதனைகளை அங்கீகரிக்கிறது. யாழ். பல்கலைக்கழக விஞ்ஞானபீடாதிபதியாக கடந்த ஐந்து ஆண்டுகளாகப் பணியாற்றிவரும் பேராசிரியர் புண்ணியமூர்த்தி ரவிராஜன் இந்தப் பட்டியலில் இடம்பிடித்துள்ளார்.

பேராசிரியர் ரவிராஜன் பல தேசிய விருதுகளைப் பெற்றுள்ளார்.

அவற்றில் துணைவேந்தர்கள் இயக்குநர்கள் சபையால் வழங்கப்பட்ட பௌதிக விஞ்ஞானத்துக்கான அதி சிறந்த இள ஆராய்ச்சியாளர் விருது, தேசிய விஞ்ஞான மன்றத்தால் வழங்கப்பட்ட இள விஞ்ஞானி விருது மற்றும் தேசிய ஆராய்ச்சிப் பேரவை பல தடவைகள் வழங்கிய சிறந்த ஆராய்ச்சி வெளியீட்டுகளுக்கான ஜனாதிபதி விருதுகள் ஆகியவை குறிப்பிடத்தக்கவை.

இவரின் ஆய்வுக் கட்டுரைகள் உலகம் முழுவதுமுள்ள விஞ்ஞானிகளால் அதிகளவு மேற்கோளிடப்பட்டுவருகின்றன. சர்வதேசத் தரத்திலான இவரது ஆய்வுச் செயற்பாடுகளால் ஆசியாவின் தலைசிறந்த 100 விஞ்ஞானிகளில் ஒருவராக தெரிவு செய்யப்பட்டுள்ளார். (எ-33-66)






# விளக்குமாறு உற்பத்திநிலையம் மாந்தை மேற்கில் திறந்துவைப்பு

மன்னார், மே 27

ஐக்கிய இராச்சியத்தின் நிதி அனுசரணையில் மன்னார் நலன்புரிச்சங்கத்தின் ஏற்பாட்டில், மாந்தை மேற்கு வீகேன் மாற்றுத்திறனாளிகள் அமைப்பினால் விளக்குமாறு உற்பத்தி நிலையம், வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் தலைமையில் கடந்த புதன்கிழமை திறந்துவைக்கப்பட்டது.

இந்த நிகழ்வில் தொழிற்றுறைத் திணைக்களத்தின் பணிப்பாளர் திருமதி வனஜா செல்வரட்ணம், மாந்தை மேற்குப் பிரதேச செயலாளர் கே.டி.அரவிந்தராஜ், வடமாகாண சுற்றுலா அபிவிருத்தி அதிகாரசபையின் தவிசாளர் அ. பத்திநாதன், அடம்பன் பங்குத்தந்தை சீமான் அடிகளார், மன்னார் நலன்புரி அமைப்பு ஐக்கிய இராச்சியத்தின் தலைவர் ஜேம்ஸ் பத்திநாதன், பொருளாளர் தே. கில்மன் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-25, 56)



கிறிசலிஸ் நிறுவனம் மற்றும் யாழ். மாவட்ட குடிசார் அமைப்புகளின் சம்மேளனம் ஆகியவற்றின் ஏற்பாட்டில், யாழ். மாவட்டச் செயலாளர் ம.பிரதீபன் மற்றும் வடமாகாண மகளிர் விவகார அமைச்சின் செயலாளர் பொ.வாகீசன் ஆகியோரின் இணைத் தலைமையில் 2025 ஆம் ஆண்டு முதலாம் காலாண்டுக் குரிய யாழ். மாவட்ட ஊராட்சி முற்றக் கலந்துரையாடல், யாழ். மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது. (ச)

# கருத்துப்பகிர்வு

யாழ்ப்பாணம், மே 27


யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கம் நடத்தும் சமகால கருத்துப்பகிர்வு நிகழ்வில் காணி நிர்ணயச் சட்டத்தின்கீழ் கடந்த மார்ச் மாதம் 28ஆம் திகதி வெளியிடப்பட்ட வர்த்தமானி தொடர்பான கருத்துப்பகிர்வு "வடக்கு கிழக்கில் அரச காணிமயமாக்கமும் அதன் அரசியல், சட்ட நோக்கு நிலைகளும்" எனும் தலைப்பில் நாளை புதன்கிழமை பிற்பகல் 2 மணியளவில் யாழ். பல்கலைக்கழக கைலாசபதி கலையரங்கில் இடம்பெறவுள்ளது.

நிகழ்வில் யாழ். பல்கலைக்கழக ஆசிரியர் சங்கத் தலைவர் த.விக்னேஸ்வரன் அறிமுக உரையை ஆற்றவுள்ளார்.

சிரேஷ்ட சட்டத்தரணி குமாரவடிவேல் குருபரன் [illegible] கருத்துப் [illegible] அறிவிக்கப்பட்டுள்ளது. (எ-41

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org


# அரசசார்பற்ற நிறுவனங்களின் திட்ட மீளாய்வுக் கலந்துரையாடல்



யாழ்ப்பாணம், மே 27
அரசசார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றக்கூட்டம் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் தலைமையில் கடந்த வியாழக்கிழமை மாவட்டச் செயலக கேட்போர் கூடத்தில் நடைபெற்றது.

கலந்துரையாடலில், அரசசார்பற்ற நிறுவனங்கள் அரசாங்கத்தின் நடைமுறைகளுக்கு அமைவாக செயற்படவேண்டிய தேவைப்பாடு உள்ளது. மாவட்டச் செயலகம் மற்றும் பிரதேச செயலகங்களுடன் இணைப்புமுறையில் செயற்படுவதன்மூலம் வினைத்திறனாகச் செயற்பட முடியும்.

அரசசார்பற்ற நிறுவனங்களினால் மேற்கொள்ளப்பட்டுவரும் வேலைத்திட்டங்களின் முன்னேற்றங்களின் அறிக்கைகளை சமர்ப்பிக்கவேண்டும் என்று யாழ். மாவட்டப் பதில் செயலர் சுட்டிக்காட்டி னார். கலந்துரையாடலில் மேலதிக மாவட்டச் செயலர் (காணி) க. ஸ்ரீமோகனன், பிரதேச செயலாளர்கள், அரசசார்பற்ற நிறுவனங்களின் மாவட்ட இணைப்பாளர், சர்வதேச மற்றும் உள்ளூர் அரசசார்பற்ற நிறுவனப் பிரதிநிதிகள், மாவட்டச் செயலக உத்தியோகத்தர்கள் ஆகியோர் கலந்துகொண்டனர். (ச-41-125)



## மாணவர் கௌரவிப்பு

யாழ்ப்பாணம், மே 27
பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபையின் ஒருங்கிணைப்பில் பிரதேசக் கலைஞர் மற்றும் மாணவர் கௌரவிப்பு நிகழ்வு பச்சிலைப்பள்ளிப் பிரதேசசபை செயலாளர் த.தர்சினி தலைமையில் மாநாட்டு மண்டபத்தில் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றது.

இதன்போது கலைஞர்கள் மற்றும் புலமைப்பரிசில் பரீட்சை, சாதாரணதரப் பரீட்சை, உயர்தரப் பரீட்சை என்பவற்றில் சித்திபெற்ற மாணவர்கள் கௌரவிக்கப்பட்டனர். (ச-22,113)

# திறந்த பல்கலையால் விண்ணப்பம் கோரல்

யாழ்ப்பாணம், மே 27

**உளவியல் சிறப்புப்பட்டம்**

கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் ஏதேனும் ஒரு பிரிவில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்தி பெற்றிருப்பதோடு, சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலபாடத்தில் சித்தியுடனும் இருக்கவேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து எதிர்வரும் 26.07.2025 வரை விண்ணப்பிக்கமுடியும்.

**மருந்தாக்கவியல் சிறப்புப்பட்டம்**

விண்ணப்பதாரி கல்விப் பொதுத்தராதர உயர்தரப் பரீட்சையில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் 3 பாடச் சித்தியுடன் இரசாயனவியலில் திறமைச்சித்தி பெற்றிருப்பதோடு சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கில பாடத்தில் சித்தியுடனும் இருக்கவேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும்.

**மருத்துவ ஆய்வுகூட விஞ்ஞானமாணி சிறப்புப்பட்டம்**

விண்ணப்பதாரி கல்விப் பொதுத்தராதர உயர்தர கணித அல்லது உயிரியல் பிரிவுப்பரீட்சையில் 3பாடங்களில்ஒரேஅமர்வில்சித்திபெற்றிருப்பதோடு, இரசாயனவியலையும் ஒரு பாடமாக எடுத்திருக்கவேண்டும். சாதாரணதரப் பரீட்சையில் ஆங்கிலபாடத்தில் சித்தியுடனும் இருக்கவேண்டும். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து அடுத்த மாதம் 15 ஆம் திகதி வரை விண்ணப்பிக்கமுடியும்.

**தாதியல்மாணி சிறப்புப்பட்டம்**

விண்ணப்பதாரி கல்விப் பொதுத்தராதர உயர்தர விஞ்ஞானப் பிரிவில் 3 பாடங்களில் ஒரே அமர்வில் சித்திபெற்றிருப்பதோடு, பொதுச்சுகாதார அமைச்சால் அங்கீகரிக்கப்பட்ட தாதியல் டிப்ளோமாவுடனும் விண்ணப்பிக்கலாம். விண்ணப்பப்படிவங்களை www.ou.ac.lk எனும் இணையத்தள முகவரியில் பிரவேசித்து 26.07.2025 வரை விண்ணப்பிக்க முடியும். மேலதிக விவரங்களை யாழ்ப்பாண பிராந்திய நிலையம், பிறவுண் வீதி கொக்குவில் எனும் முகவரியூடாகவும் 0212223374 எனும் தொலைபேசி இலக்கத்தினூடாகவும் தொடர்புகொண்டு பெற்றுக்கொள்ளமுடியும் எனப் பிராந்திய நிலைய உதவிப்பணிப்பாளர் அறிவித்துள்ளார். (ச- 25)



தூய இலங்கைச் செயற்றிட்டத்தின் கீழ் பச்சிலைப் பள்ளிப் பிரதேச செயலகத்துக்குட்பட்ட கச்சார்வெளி மற்றும் செல்வபுரம் ஆகிய இடங்களில் கடந்த புதன்கிழமை துப்புரவுப்பணிகள் மேற்கொள்ளப்பட்டன. (ச-25, 9)



## பிளாஸ்ரிக் போத்தல் மீள்சுழற்சித் திட்டம்

யாழ்ப்பாணம், மே 27
மக்கள் அதிகளவில் கூடும் இடங்களில் வீசப்படும் பிளாஸ்ரிக் போத்தல்களைச் சேகரித்து மீள்சுழற்சிக்குப் பயன்படுத்தும் நோக்கில் தென்மராட்சிப் பிரதேசத்தின் மூன்று இடங்களில் குப்பைத்தொட்டிகள் வைக்கப்பட்டுள்ளன. 'சேவ் ஏ லைப்' எனும் அமைப்பினால் வழங்கப்பட்ட குறித்த போத்தல் சேகரிப்புத் தொட்டிகள் சாவகச்சேரி பேருந்து நிலையம், தென்மராட்சிப் பிரதேச செயலக முன்றல், கொடிகாமம் பொதுச்சந்தை ஆகிய இடங்களிலேயே வைக்கப்பட்டுள்ளன. (ச-25,9)

# புதிய நீரிணைப்புகள் யாழில் செயற்றிட்டம்

யாழ்ப்பாணம், மே 27
புதிய நீரிணைப்புகள் வழங்கும் செயற்றிட்டம் தொடர்பான கலந்துரையாடல் யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம.பிரதீபன் தலைமையில் அவரது அலுவலகத்தில் கடந்த வியாழக்கிழமை இடம்பெற்றது.

கலந்துரையாடலில் யாழ். மாவட்ட மேலதிக செயலர் (காணி) க. ஸ்ரீமோகனன், கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், தெல்லிப்பழை, யாழ்ப்பாணம், பருத்தித்துறை மற்றும் வேலணைப் பிரதேச செயலாளர்கள், தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையின் பொறியியலாளர் மற்றும் மீள்குடியேற்றப் பிரிவின் உத்தியோகத்தர்கள் எனப் பலரும் கலந்துகொண்டனர். இதன்போது, தேசிய நீர்வழங்கல் வடிகாலமைப்புச் சபையினால் யாழ்ப்பாணம், கிளிநொச்சி நீர்வழங்கல் திட்டத்தின்கீழ் புதிய நீரிணைப்புகள் வழங்கும் பணிகளின் முதற்கட்டமாக, தேவைப்பாடுடைய பயனாளிகளுக்கும் புதிய இலவச நீரிணைப்புக்கள் வழங்குவது தொடர்பாக ஆராயப்பட்டது, தெல்லிப்பழைப் பிரதேச செயலாளர் பிரிவில் காணப்படும் நீரிணைப்பிலிருந்து புதிய இணைப்புகளை விஸ்தரிப்பதற்கும், தாழையடி நீர் வழங்கல் திட்டத்தின்கீழ் கரவெட்டி, கோப்பாய், சாவகச்சேரி, நல்லூர், யாழ்ப்பாணம், பருத்தித்துறை, வேலணை ஆகிய பிரதேச செயலகங்களுக்கு இலவச நீர் விநியோகிக்கவும் தீர்மானிக்கப்பட்டுள்ளது. இதற்காக ஒவ்வொரு பிரதேச செயலாளர் பிரிவுகளிலிருந்தும் 500 பயனாளிகளைத் தெரிவு செய்வது எனவும் தீர்மானிக்கப்பட்டது. (ச-25,66,27,125)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# சமையலின்போது பற்றியது தீ; குடும்பப்பெண் பரிதாபச் சாவு!

யாழ்ப்பாணம், மே 26

சமையல் வேலையில் ஈடுபட்டுக் கொண்டிருந்த இளம் குடும்பப் பெண் தீவிபத்துக்கு உள்ளாகி நேற்றையதினம் உயிரிழந்துள்ளார்.

புலவர் வீதி, நவாலி வடக்கு, மானிப்பாய் பகுதியைச் சேர்ந்த கஜன் ஜனுயா (வயது - 23) என்ற பெண்ணே இவ்வாறு உயிரிழந்துள்ளார். கடந்த 20ஆம் திகதி சமையலில் ஈடுபட்டுக் கொண்டிருந்த வேளை, அடுப்புக்கு மண்ணெண்ணெய் ஊற்றியபோது, அது அவரது ஆடையில் பட்டு பரவியுள்ளது. இதையடுத்து யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையில் சேர்க்கப்பட்ட அவர் சிகிச்சையின்போது நேற்று உயிரிழந்துள்ளார்.

இறப்பு விசாரணைகளை திடீர் மரண விசாரணை அதிகாரி ஆ.ஜெயபாலசிங்கம் மேற்கொண்டார். தீ காயத்தால் கிருமித் தொற்று ஏற்பட்டு இறப்புச் சம்பவித்துள்ளதாக உடற்கூற்று பரிசோதனைகளில் தெரியவந்துள்ளது. (ம-26-27)

**மாபிள் வேலை**

உங்கள் வீடுகளுக்கு தரமான முறையில் அழகாக மாபிள் பதித்துத் தரப்படும்.
1 சதுர அடி - 75 ரூபா
நிலம் இழுத்துப் பதிக்க - 100 ரூபா
தொடர்புகளுக்கு:
**077 334 1281**

## வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, புத்தூர்
### இறைச்சிக்கடை குத்தகைக்கு வழங்குவதற்கான 2 ஆவது மீள்கேள்வி அறிவித்தல்
### (03.06.2025 - 31.12.2025)

கீழ்க்குறிப்பிடப்படும் இறைச்சிக்கடை 2025ஆம் ஆண்டிற்கு (03.06.2025 - 31.12.2025) குத்தகைக்கு வழங்குவதற்காக சபையினால் மீள் கேள்வி கோரப்படுகின்றது.

கேள்விப்பத்திரம் வழங்கப்படும் திகதி : 27.05.2025 – 02.06.2025 நண்பகல் 12.00 மணி வரை
கேள்விகள் ஏற்றுக்கொள்ளப்படும் இறுதித்திகதி : 02.06.2025 பி.ப 02.00 மணி வரை
கேள்விகள் திறந்து பரிசீலிக்கப்படும் திகதி : 02.06.2025 புதன்கிழமை பி.ப 02.00 மணி
கேள்விப் பத்திரம் திறக்கப்படும் இடம் : வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்

கேள்விகள் இணைப்பிரதிகளில் தயாரிக்கப்பட்டு கடித உறையில் இடது பக்க மேல் மூலையில் கேள்வியின் பெயர் தெளிவாகக் குறிப்பிட்டு மூலப்பிரதியையும் இணைப்பிரதியையும் "தலைவர், உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு, வலிகாமம் கிழக்கு பிரதேச சபை, தலைமை அலுவலகம், புத்தூர்" என்னும் முகவரிக்கு எதிர்வரும் 02.06.2025 ஆம் திகதி பி.ப 02.00 மணிக்கு முன்னர் கிடைக்கக்கூடியதாக நேரடியாகவோ அல்லது தபால் மூலமாகவோ அனுப்பி வைக்கப்படல் வேண்டும். மேலும் கேள்வியை தகுந்த காரணங்களால் ஏற்கவோ அல்லது நிராகரிக்கவோ கேள்விச்சபைக்கு பூரண அதிகாரம் உண்டு.

கேள்வி சம்பந்தமான மேலதிக விவரங்களை எமது தலைமை அலுவலகத்தில் அலுவலக நேரங்களில் பார்வையிடுவதுடன், உரிய கட்டணங்களைச் செலுத்தி கேள்விப்பத்திரங்களையும் பெற்றுக்கொள்ளலாம்.

| இல | விபரம் | வாடகை | மீளளிக்கப்படாத கேள்விப்படிவ கட்டணம் | மீளளிக்கப்படும் கேள்வி வைப்புப்பணம் | 2025 ஏற்றுக்கொள்ளக் கூடிய ஆகக்குறைந்த மீள்கேள்வித்தொகை (VAT,NBT நீங்கலாக) |
|---|---|---|---|---|---|
| புத்தூர் உப அலுவலகம் (சுன்னாகம் வீதி, புத்தூர் - புதிய கட்டிடம்) | | | | | |
| 1 | புத்தூர் மாட்டிறைச்சிக்கடை | 1,600.00 | 1,000.00 | 80,000.00 | 2,456,930.00 |

கேள்விகள் தொடர்பான நிபந்தனைகளை ஏற்கனவே 2024.10.26. 2024.11.23 ஆம் திகதிகளில் இப்பத்திரிகையில் பிரசுரிக்கப்பட்ட கேள்வி அறிவித்தலில் குறிப்பிட்டதற்கமைவாக பின்பற்றவும்.

தலைவர்,
உள்ளூராட்சி மன்ற பெறுகைக்குழு,
வலிகாமம் கிழக்கு பிரதேச சபை
புத்தூர்.

(CR/45091) J-1 2025.05.27

**வீடு வாடகைக்கு**

இராச வீதியில் அமைந்துள்ள சகல வசதிகளையும் உடைய வீடு வாடகைக்கு விடப்படும்.

தொடர்பு: 077 920 7348

**வீடு வாடகைக்கு உண்டு**

கல்வியங்காடு சந்திக்கு அருகில் Main Road இல்
2 அறை, 1 Hall, 1 Office Room
நிறுவனங்கள், களஞ்சியப்படுத்தலும் விரும்பத்தக்கது

தொடர்பு: 077 627 3493

## பெயர் மாற்றம்

இடைக்குறிச்சி, கிழக்கு வரணியில் வசிக்கும் சிதம்பரநாதர் தெய்வேந்திரன் ஆகிய நான் எனது பெயரை சிதம்பரநாதர் தெய்வேந்திரம்பிள்ளை என மாற்றம் செய்வதோடு இனிவரும் சகல ஆவணங்களிலும் சிதம்பரநாதர் தெய்வேந்திரம்பிள்ளை என்றே கையொப்பம் இடுவேன் என இலங்கை ஜனநாயக சோசலிச குடியரசு மக்களுக்கு அறியத்தருகின்றேன்.

சிதம்பரநாதர்
தெய்வேந்திரம்பிள்ளை

## கண்ணீர் அஞ்சலி



**சிதம்பரப்பிள்ளை அருளேஸ்வரி**

துன்னாலை கிழக்கைப் பிறப்பிடமாகவும் வசிப்பிடமாகவும் கொண்ட சிதம்பரப்பிள்ளை அருளேஸ்வரி அவர்கள் நேற்று (26.05.2025) திங்கட்கிழமை இறைவனடி சேர்ந்தார்.


அன்னார் தெட்சணாமூர்த்தி-இளையதங்கம் தம்பதியின் சிரேஷ்ட புதல்வியும் சிதம்பரப்பிள்ளை அவர்களின் அன்பு மனைவியும், செல்வராஜா (கனடா), புவனேஸ்வரி (இஞ்சி அக்கா), இராஜேந்திரராஜா, மகேந்திரராஜா (ஜேர்மன்), தவராசா (சுவிஸ்), யோகேஸ்வரி (ஓய்வு நிலை ஆசிரியர்) ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்ற சிவரூபன் (அசோகன்), சிவகுமார் (ஆசிரியர்-யா/விக்னேஸ்வரா கல்லூரி), பவானி (அபிவிருத்தி உத்தியோகத்தர்-பிரதேசசெயலகம்,கோப்பாய்), சிவரஞ்சன் (பிரதம கணக்காளர், மாவட்டசெயலகம்-அனுராதபுரம்), சிவகாந்தன் (உரிமையாளர்,சென்றல் சேவிஸ்ரேசன் நெல்லியடி) ஆகியோரின் அன்புத் தாயாரும் பாலச்சந்திரமூர்த்தி (ஆசிரிய வளவாளர் வடமராட்சி கல்வி வலயம்), கோமதி (ஆசிரியர், யா/விக்கினேஸ்வர ஆரம்பப் பாடசாலை), நர்மதா (அபிவிருத்தி உத்தியோகத்தர்- பிரதேசசபை, கரவெட்டி), கீதாஞ்சலி ஆகியோரின் அன்பு மாமியாரும் நிலக்ஷன் (பொறியியல் பீடம்-பேராதனை), ரஜீவன், அபிஷகன், லாசகன், லாஷனா, கஜானா, ஜனுசன், சுவஸ்திகா, ஆருஸ், ஆதேஸ் ஆகியோரின் அன்புப் பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் நாளை (27.05.2025) செவ்வாய்க்கிழமை பிற்பகல் 12.30 மணியளவில் நடைபெற்று பூதவுடல் தகனக்கிரியைக்காக கியான்காடு மயானத்திற்கு எடுத்துச் செல்லப்படும்.

இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளவும்.

தகவல்:
குடும்பத்தினர்

## 1 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



08.06.2024 வெள்ளிக்கிழமை அன்று சிவபதமடைந்த எமது குடும்பத் தலைவர்

**அமரர் பொன்னம்பலம் இளையதம்பி**

அவர்களின் முதலாம் ஆண்டு ஆத்மசாந்திப் பிரார்த்தனை நிகழ்வுகள் இன்று (27.05.2025) செவ்வாய்க்கிழமை நண்பகல் 12.00 மணியளவில் அன்னாரது இல்லத்தில் நடைபெறவுள்ளதால் அத்தருணம் தாங்கள் தங்கள் குடும்ப சகிதம் வருகை தந்து அன்னாரின் ஆத்மசாந்திப் பிரார்த்தனையிலும் அதனைத் தொடர்ந்து நடைபெறும் மதிய போசன நிகழ்விலும் கலந்துகொள்ளும் வண்ணம் அன்புடன் அழைக்கின்றோம்.

இடைவில் மேற்கு,
இடைவில்

இங்ஙனம்
குடும்பத்தினர்.

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

ஓம் விராட் விஸ்வ பிரம்மனே நமஹ

# நான்காம் ஆண்டு நினைவஞ்சலி

## அமரர் நடராசா கோவிந்தராசா பத்தர் (கோவிந்து)



தோற்றம் 25.02.1952 | மறைவு 11.06.2021

திதி : பிரதமை

அன்பாய் அரவணைத்து
அறிவுரைகள் பல கூறி விகடமாய் பேசி
எமையெல்லாம் மகிழ்வித்து விட்டு
எங்கு சென்றீர்கள் அப்பா.......
நான்கு ஆண்டுகள் என்ன ஆண்டுகள் பல
சென்றாலும் என்றும் உங்கள்
நினைவுகள் எம் நெஞ்சை விட்டகலாது

குடும்பத்தினர்.
இல 64 காரைகாட்டு ஒழுங்கை,
வண்ணார்பண்ணை, யாழ்ப்பாணம்
021 222 3432, 021 222 5184

# மரண அறிவித்தல்



தோற்றம் 14 . 12 . 1938 | மறைவு 24 . 05 . 2025

## நல்லையா அழகம்மா

மாரீசன்கூடல் இளவாலையை பிறப்பிடமாகவும் கொழும்பு, நோர்வே யை வசிப்பிடமாகவும் கொண்ட நல்லையா அழகம்மா அவர்கள் (24.05.2025) சனிக்கிழமை நோர்வேயில் காலமானார்.

அன்னார் காலஞ்சென்றவர்களான பொன்னையா - மாணிக்கம் தம்பதியினரின் அன்பு மகளும் திரு திருமதி நாகலிங்கம் தம்பதியினரின் மருமகளும், நல்லையா ஆசிரியரின்(தாவடி) அன்பு மனைவியும், காலஞ்சென்றவர்களான தங்கம்மா, அன்னரத்தினம், பரராஜசிங்கம், துரைராஜா, நடராஜா ஆகியோரின் அன்புச் சகோதரியும் காலஞ்சென்றவர்களான ஸ்ரீசிவதாஸ், நிற்குணம் மற்றும் முருகதாஸ், கங்காதரன், பத்மநாதன், வசந்தினி, வரதன் ஆகியோரின் அன்புத்தாயாரும் பூமலக்குமி, யசோதரா, காலஞ்சென்ற சந்திரவதனா மற்றும் அஜந்தா, செல்வரதி, பகீரதி, சாந்தீபன் ஆகியோரின் அன்பு மாமியாரும் தர்ஷா, கம்ஷாந்த், லோசா, குணசீலன், மதுரா, பிரியா, மகிழன், கிருஷ்ணா, நாராயணி, ருத்தாரகன், யாழினி, ஹரிணி, திருசாந், டர்ஷன் ஆகியோரின் பாசமிகு பேர்த்தியும் ஆவார்.

அன்னாரின் இறுதிக்கிரியைகள் பற்றிய தகவல்கள் பின்னர் அறியத்தரப்படும். இவ் அறிவித்தலை உற்றார், உறவினர், நண்பர்கள் அனைவரும் ஏற்றுக் கொள்ளும்படி கேட்டுக்கொள்கின்றோம்.

செட்டிச்சோலை,
அளவெட்டி வடக்கு

தகவல்:
நல்லையா முருகதாஸ்

# 32 ஆம் ஆண்டு நினைவஞ்சலி



பிறப்பு 23 . 10 . 1926 | இறப்பு 22 . 05 . 1993

## அமரர் வல்லிபுரம் சங்கரப்பிள்ளை

(விவசாய நண்பன்)
கைதடி கிழக்கு கைதடி.

வீரகத்திப்பிள்ளையார் அருள்பாலித்து நிற்கும் கைதடி நகரில் திரு.திருமதி. வல்லிபுரம் பொன்னாச்சிப்பிள்ளை தம்பதிகளுக்கு 23.10.1926 அன்று சிரேஷ்ட புதல்வனாக திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் பிறந்தார். வையகம் போற்றும் விவசாய நண்பனாக வாழ்ந்த திரு. சங்கரப்பிள்ளை அவர்கள் மனைவி சடைப்பிள்ளை, பிள்ளைகள், மருமக்கள், பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகளைப் பிரிந்து 22.05.1993 அன்று சிவபதம் அடைந்தார்.

தான் காணாத உலகத்தை நாம் காண
நம் சுமைகளை தன்தோளில் சுமந்து
அன்பையும் அறிவையும் புகட்டி
அழகான வாழ்கையை எமக்கு அமைத்து
எமக்காக வாழ்ந்த எங்கள் அன்புத் தெய்வமே!

நீங்கள் நம்முடன் இல்லாத போதும்
உங்கள் நினைவுகளும், நீங்கள் காட்டிய
வழிகளும்
உங்கள் ஆசிகளும்
எங்களை உங்கள் நினைவுகளுடன்
நல்லபடியாக வாழவைக்கின்றது.

ஆண்டுகள் ஆயிரம் ஆனாலும்
என்றும் எம்முடன் வாழ்வீர்கள்.

உங்கள் ஆத்மா சாந்தியடையப்
பிரார்த்திக்கின்றோம்.

மனைவி : திருமதி சடப்பிள்ளை சங்கரப்பிள்ளை
பிள்ளைகள், மருமக்கள்,
பேரப்பிள்ளைகள், பூட்டப்பிள்ளைகள்.

கைதடி கிழக்கு,
கைதடி.

(CS/58397) J-1

ஓம் விராட் விஸ்வப பிரம்மநே நமஹ

# முதலாம் ஆண்டு நினைவஞ்சலி



தோற்றம் 04 . 08 . 1937 | மறைவு 07 . 06 . 2024

## அமரர் விசுவலிங்கம் பாக்கியம் (முத்துப்பிள்ளை)

ஓராண்டு கழிந்தாலும்
ஓவியமாய் பதிந்திருக்கிறது
உங்கள் முகம்
காவியமாய் வாழ்ந்தீர்கள்
உம்மை
காலமெல்லாம் நினைத்திருப்போம்
தேனினிய உங்கள் குணம்
தேடி நாம் உருகுகிறோம்
ஆண்டவன் காலடியில்
உங்கள் ஆத்மா சாந்தியடைய
பிரார்த்திக்கின்றோம்

எங்களது அம்மாவின் ஆண்டுத்திவசம் நாளை (28.05.2025) புதன்கிழமை அன்னாரின் இல்லத்தில் முற்பகல் 11.00 மணியளவில் நினைவஞ்சலியும் ஆத்மா சாந்தி பிரார்த்தனையும் இடம்பெறும். அத் தருணம் தாங்களும் தங்கள் குடும்பசகிதம் வருகைதருமாறு அன்புடன் அழைக்கின்றோம்.

சங்கத்தானை
சாவகச்சேரி

அன்புடன்
பிள்ளைகள்

(CR 45038) E-1

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# காணி அபகரிப்பு வர்த்தமானியை மீளப்பெற அழுத்தம் கொடுங்கள்!

## கஜேந்திரகுமார் எம்.பி. தென்னாபிரிக்காவிடம் கோரிக்கை

**யாழ்ப்பாணம், மே 27**

**வடக்கில் காணி அபகரிப்பு நோக்கத்துடன் அரசாங்கம் வெளியிட்டுள்ள வர்த்தமானி அறிவித்தலை உடனடியாக இரத்துச்செய்வதற்குத் தென்னாபிரிக்கா அழுத்தம் கொடுக்கவேண்டும் என்று நாடாளுமன்ற உறுப்பினர் கஜேந்திரகுமார் பொன்னம்பலம் இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவரிடம் வலியுறுத்தியுள்ளார்.**

இலங்கைக்கான தென்னாபிரிக்கத் தூதுவரைச் சந்தித்து கலந்துரையாடியபோது அவர் இதனைத் தெரிவித்தார். இந்தச் சந்திப்புத் தொடர்பில் அவர் தெரிவித்துள்ளதாவது:-

தென்னாபிரிக்கத் தூதுவருடனான சந்திப்பில் மூன்று விடயங்கள் தொடர்பில் கலந்துரையாடினேன். கடந்த மார்ச் மாதம் வெளியிடப்பட்ட வர்த்தமானி ஊடாக வடக்கு மாகாணத்தில் சுமார் 6 ஆயிரம் ஏக்கர் காணிகளை அரச காணிகளாக சுவீகரித்து, திட்டமிட்ட சிங்கள பௌத்த மயமாக்கலை மேற்கொள்ளும் கபட முயற்சிக்கு எதிராக ஆட்சேபனையைத் தெரிவித்திருந்தேன்.

இந்த வர்த்தமானியை அரசாங்கம் திரும்பப்பெறுவதற்கான அழுத்தங்களைப் பிரயோகிக்கவேண்டும் என்று வலியுறுத்தினேன்.

குருந்தூர்மலையில் தொல்பொருள் திணைக்களத்துக்கு 79 ஏக்கர் நிலப்பரப்பு மட்டுமே சொந்தமானது என்று 1932 ஆம் ஆண்டு வர்த்தமானி வெளிப்படுத்துகிறது.

எனினும் அதற்கு மேலதிகமாக 325 ஏக்கர் காணிகளை தொல்பொருள் திணைக்களத்துக்கு வழங்கவேண்டுமென கடந்த ஆட்சிக்காலத்தில் புத்தபிக்கு அரசாங்கத்திடம் கோரியிருந்தார்.

எனினும் அவை தமிழ் மக்கள் விவசாயம் செய்துவந்த காணிகள் என்பதனால் அவர்களது விவசாய நடவடிக்கைகளைக் கருத்திற்கொண்டு அப்போதைய ஜனாதிபதி ரணில் விக்கிரமசிங்கவால் அந்தக் கோரிக்கை நிராகரிக்கப்பட்டிருந்ததுடன் அந்த 325 ஏக்கர் காணிகளையும் பொதுமக்கள் பயன்படுத்த அனுமதிக்கவேண்டுமெனவும் கூறப்பட்டிருந்தது.

ஆனாலும் அங்கு விவசாய நடவடிக்கையில் ஈடுபட்டிருந்த விவசாயிகள் மூன்றுபேர் நீதிக்குப் புறம்பாக கைது செய்யப்பட்டு இரண்டுபேர் விளக்கமறியலில் வைக்கப்பட்டுள்ளனர்.

தையிட்டி சட்டவிரோதமான விகாரை தொடர்பில் பேசியிருந்தோம். சட்டவிரோதமான விகாரை என்று தெரிந்தும் இன்னமும் அந்தக் காணிகளின் உரிமையாளர்களிடம் காணிகளை வழங்காது அரசின் செயற்பாடுகள் தொடர்கின்றன.

தையிட்டி விகாரை சட்டவிரோதமானது தொல்பொருளுடன் தொடர்பு அற்றது. சட்டவிரோதமாகக் கட்டப்பட்டது அது அகற்றப்படவேண்டும். காணிகள் உரிமையாளர்களிடம் கையளிக்கப்படல்வேண்டும், அதற்கான நடவடிக்கைகளை முன்னெடுக்கவேண்டும் என்று கோரியிருந்தேன் - என்றார். (எ-26)

# உயர்கல்வி வழிகாட்டல் செயலமர்வு

யாழ்ப்பாணம், மே 27

யாழ்ப்பாணப் பல்கலைக்கழக தொழில் வழிகாட்டல் அலகும் விஞ்ஞானபீட தொழில் வழிகாட்டல் அலகும் இணைந்து நடத்தும் 'உயர்தரத்துக்குப் பின்னரான உயர் கல்வி வழிகாட்டல்' எனும் தொனிப்பொருளினாலான செயலமர்வு இன்று செவ்வாய்க்கிழமை இடம்பெறவுள்ளது.

காலை 9 மணி தொடக்கம் 10 மணிவரை பொது அமர்வும், 10 மணி தொடக்கம் 12 மணிவரை கணிதத்துறைக்கான வழிகாட்டலும் கைலாசபதி கலையரங்கில் இடம்பெறும். உயிரியல் துறைக்கான வழிகாட்டல் பல்கலைக்கழக நூலக கேட்போர் கூடத்தில் இடம்பெறும்.

பல்கலைக்கழக அனுமதிக்கான விண்ணப்பங்களை சரியான முறையில் நிரப்புதல், பல்கலைக்கழக அனுமதியைப் பெற்றுக்கொள்ளும் நுட்பங்கள், பல்கலைக்கழக வாய்ப்பினை தவறவிட்ட மாணவர்களுக்கான உயர்கல்வி வழிகாட்டல்கள், இலங்கையில் உள்ள அரச பல்கலைக்கழகங்களில் வேறுபட்ட துறைகளுக்கான வாய்ப்புகள், தொழில்வாண்மை சார் கற்கை நெறிகள், பொறியியல், உயிரியல், பௌதீக விஞ்ஞானம், கணினி விஞ்ஞானம் தொடர்பிலான வேறுபட்ட பல்கலைக்கழகங்களில் உள்ள வாய்ப்புகள் என்பன தொடர்பில் பல்கலைக்கழக பேராசிரியர்கள் மற்றும் விரிவுரையாளர்களினால் வழிகாட்டல்கள் வழங்கப்படவுள்ளன.

இந்த செயலமர்வில், பல்கலைக்கழக அனுமதிக்காக காத்திருக்கும் மாணவர்களும் உயர்கல்விக்கான வாய்ப்பை எதிர்பார்த்திருக்கும் மாணவர்களும் மற்றும் உயர்தரம் பயிலும் மாணவர்களும் கலந்துகொண்டு பயன்பெறுமாறு அழைப்பு விடுக்கப்பட்டுள்ளது. (எ-33-20)

# அபிவிருத்தித் திட்ட கலந்துரையாடல்

யாழ்ப்பாணம், மே 27

கிராம அபிவிருத்தித் திட்டம் தயாரித்தல் தொடர்பான கலந்துரையாடல் இன்று செவ்வாய்க்கிழமை காலை 9.30 மணிக்கு செருக்கல் பிள்ளையார் வீதியில் அமைந்துள்ள சாவகச்சேரி நகர் ஜே/300 கிராமசேவகர் அலுவலகத்தில் இடம்பெறவுள்ளது. இதில் கிராமமட்ட அமைப்புகளின் தலைவர்கள், பிரதிநிதிகள், மற்றும் பொதுமக்கள் என அனைவரையும் தவறாது கலந்துகொண்டு கிராம அபிவிருத்தி தொடர்பான திட்ட முன்மொழிவுகளை முன்வைக்க வேண்டும் என்று பொருளாதார அபிவிருத்தி உத்தியோகத்தர் கோரியுள்ளார். (எ-33-28)

# அதிபர், ஆசிரியர் வாள்வெட்டுக்கு இலக்கு

மட்டக்களப்பு, மே 27

மட்டக்களப்பு, அக்கரைப்பற்று ஆலையடி வேம்புப் பிரதேசத்தில் ஆசிரியர் மற்றும் அதிபர் ஆகியோர் வாள்வெட்டுக்கு இலக்காகி படுகாயமடைந்தநிலையில் மருத்துவமனையில் சேர்க்கப்பட்டுள்ளனர். வாள்வெட்டுத் தாக்குதலை மேற்கொண்ட நபர் கைதுசெய்யப்பட்டுள்ளா ரென அக்கரைப்பற்றுப் பொலிஸார் தெரிவித்துள்ளனர். (ச-இ)

# மீனவர் மீது கடற்படை மூர்க்கத் தாக்குதல் முறைப்பாட்டை ஏற்பதற்கு பொலிஸ் மறுப்பு

## மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு

கிளிநொச்சி, மே 27

கிளிநொச்சி கல்லாறு பேய்பாறைப் பட்டி பகுதியில் கடற்றொழிலுக்கு சென்ற மீனவர் மீது, கடற்படையினர் மூர்க்கத் தாக்குதல் நடத்தியுள்ளனர். இது தொடர்பில் அவர் முறைப்பாடு வழங்கச் சென்றபோது தருமபுரம் பொலிஸார் முறைப்பாட்டை ஏற்பதற்கு மறுத்துள்ளனர். இதையடுத்து, அந்த நபர் தனக்கு நிகழ்ந்தவற்றை இலங்கை மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடாகப் பதிவு செய்துள்ளார்.

சம்பவம் தொடர்பில் தெரியவருவதாவது:-

கடந்த 21ஆம் திகதி பத்துக்கும் மேற்பட்ட கடற்படையினரால் அந்த மீனவர் மீது தாக்குதல் நடத்தப்பட்டுள்ளது. இதை அவதானித்தவர்கள், விடயம் தொடர்பில் தருமபுரம் பொலிஸாருக்குத் தகவல்களை வழங்கிய நிலையில், சம்பவ இடத்துக்கு சென்ற பொலிஸார் பாதிக்கப்பட்ட நபரை மீட்டு தருமபுரம் மருத்துவமனையில் சேர்த்தனர். எனினும், தாக்குதலுக்கு உள்ளானவரிடம் முறைப்பாட்டைப் பெறுவதற்கு அவர்கள் மறுத்துள்ளனர். இதையடுத்தே, பாதிக்கப்பட்டவரால் மனித உரிமைகள் ஆணைக்குழுவில் முறைப்பாடு பதிவு செய்யப்பட்டுள்ளது. (எ-315)

**விற்பனைக்கு**

**வியாபார நிலையத்திற்கு உகந்த இரும்பு றாக்கைகள், அலுமினிய சோக்கேஸ்கள், கூலர் (டபிள் கதவு) பிறிச் விற்பனைக்கு உண்டு.**

தொடர்புகளுக்கு: **077 940 3281**

# மரண அறிவித்தல்



**அருட்சகோதரி ஸ்ரெபனி நிக்கிலாப்பிள்ளை தி.கு**

மிருசுவில், யாழ்ப்பாணத்தைப் பிறப்பிடமாகவும் யாழ். திருக்குடும்ப சபையைச் சேர்ந்தவருமான அருட்சகோதரி ஸ்ரெபனி நிக்கிலாப்பிள்ளை தி.கு (26.05.2025) திங்கட்கிழமை இறைபதம் இணைந்துவிட்டார். அன்னாரின் இறுதிச் சடங்கு (27.05.2025) இன்று செவ்வாய்க் கிழமை பிற்பகல் 04.00 மணிக்கு யாழ்ப்பாணம், பிரதான வீதியில் அமைந்துள்ள திருக்குடும்ப மாகாண இல்ல சிற்றாலயத்தில் திருப்பலி ஒப்புக்கொடுக்கப்பட்ட பின்னர், யாழ் கொஞ்சேஞ்சி மாதா சேமக்காலையில் நல்லடக்கம் செய்யப்படும்.

**தகவல்:**
**அருட்சகோதரி தியோவ்வின் குரூஸ்**
**மாகாணத் தலைவி.**
**121, பிரதான வீதி**
**யாழ்ப்பாணம்.**

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# இந்தியாவுடனான ஒப்பந்தத்தை பகிரங்கப்படுத்தாமை ஏன்?

## தயாசிறி கேள்வி



கொழும்பு, மே 27

இந்தியாவுடன் இலங்கை கைச்சாத்திட்டுள்ள ஒப்பந்தங்களைப் பகிரங்கப்படுத்துவதில் அரசாங்கம் ஏன் பின்வாங்குகிறது. இந்த வாரத்திலாவது ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்க வேண்டும் என்று வலியுறுத்துகிறேன் என ஐக்கிய மக்கள் சக்தியின் நாடாளுமன்ற உறுப்பினர் தயாசிறி ஜயசேகர தெரிவித்துள்ளார். நாடாளுமன்றத்தில் நடைபெற்ற உற்பத்தி வரிச் (விசேட ஏற்பாடுகள்) சட்டத்தின் மீதான விவாதத்தில் உரையாற்றுகையில் அவர் மேற்கண்டவாறு குறிப்பிட்டார்.

அவர் மேலும் தெரிவிக்கையில்,

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட 7 ஒப்பந்தங்கள் நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிக்கப்படும் என்று வெளிவிவகாரத்துறை அமைச்சர் குறிப்பிட்டார். ஆனால் இதுவரையில் அந்த ஒப்பந்தங்கள் சமர்ப்பிக்கப்படவில்லை. இந்தியாவுடனான ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதாயின் இந்தியாவின் அனு மதியைப் பெறவேண்டும் என்று அமைச்சரவைப் பேச்சாளர் நளிந்த ஜயதிஸ்ஸ குறிப்பிடுகிறார். இந்தியாவின் அனுமதியைப் பெற வேண்டுமாயின் ஒப்பந்தத்தை கைச்சாத்திடாமல் இருந்திருக்கலாம்.

இந்தியாவுடன் கைச்சாத்திடப்பட்ட ஒப்பந்தங்களை நாடாளுமன்றத்துக்குச் சமர்ப்பிப்பதற்கு இந்த அரசாங்கம் ஏன் பின்வாங்குகிறது? கடந்த காலங்களில் தேசிய மக்கள் சக்தி எட்கா, சோபா மற்றும் இந்தியாவுடனான பல ஒப்பந்தங்களைக் கடுமையாக எதிர்த்தது. 'இந்தியாவுடனான திருட்டு ஒப்பந்தங்களைக் கிழித்தெறிவோம்' என்று நாடு முழுவதும் எதிர்ப்புப் போராட்டங்களை முன்னெடுத்தீர்கள், இன்று என்ன செய்கின்றீர்கள்?- என்றார். (ச-இ)

### வீதி அபிவிருத்தி நிதியை

# நவம்பருக்குள் பயன்படுத்துக

பன்முகப்படுத்தப்பட்ட வரவு - செலவுத் திட்டத்தில் வீதி அபிவிருத்தித் திட்டங்களுக்கு ஒதுக்கப்பட்ட நிதியை இந்த ஆண்டு நவம்பர் மாத இறுதிக்குள் சரியான முறையில் பயன்படுத்துமாறு பிரதேச செயலாளர்களுக்கு யாழ்.மாவட்டப் பதில் செயலர் ம. பிரதீபன் பணிப்புரை விடுத்துள்ளார்.

அபிவிருத்தித் திட்டங்கள் தொடர்பான முன்னேற்ற மீளாய்வுக்கூட்டம் கடந்த வியாழக்கிழமை நடைபெற்றபோது அவர் இவ்வாறு பணிப்புரை விடுத்தார்.

இதன்போது கிராமிய அபிவிருத்தித் திட்டம், வீதி அபிவிருத்தித் திட்டம், வீட்டுத் திட்டம், குடிநீர் போன்ற திட்டங்க ளின் முன்னேற்றம் தொடர்பாகவும் ஆராயப்பட்டு உரிய அறிவுறுத்தல்களும் வழங்கப்பட்டன. (ச-25,66)

## ஹெரோய்னுடன்...

முன்னெடுக்கப்பட்டுள்ளது. சந்தேகநபர் 30 வயதுடையவர். அவரிடமிருந்து 2 கிராம் 190 மில்லிகிராம் ஹெரோய்ன் மீட்கப்பட்டுள்ள நிலையில், மேலதிக விசாரணைகளை பொலிஸார் முன்னெடுத்துவருகின்றனர். (அ-ம-125)

## தமிழ்த்...

தலைவர்கள் யாழ்ப்பாணம் மாவட்டச் செயலகத்துக்கு அருகேயுள்ள மண்டபத்தில் ஒன்றுகூடிக் கலந்துரையாடலில் ஈடுபட்டனர். இதன்போது, தமிழர் தாயகத்தில் உள்ளூராட்சிசபைகளில் ஆட்சியமைப்பது தொடர்பில் நாங்கள் கொள்கைரீதியில் சில இணக்கப்பாட்டுக்கு வந்துள்ளோம்.

இதன்படி பின்வரும் முடிவுகள் பேரவையினரால் எடுக்கப்பட்டுள்ளன.

✦ மாநகரசபைகள் உட்பட அனைத்து உள்ளூராட்சி மன்றங்களிலும் கூடுதலான ஆசனங்களைப் பெற்ற தமிழ்த் தேசியத் தரப்பினர் ஆட்சியமைப்பதற்கு பேரவை ஆதரவு வழங்கும். சமமான ஆசனங்களைப் பெற்றிருப்பின், கூடுதலான வாக்குகளைப் பெற்ற தமிழ்த் தேசியக் கட்சிகளுக்கு தவிசாளர் தெரிவில் ஆதரவு வழங்குவதுடன் அவ்வாறான சபைகளுக்கான தவிசாளர் தெரிவில் தமிழ்த் தேசியப் பேரவை போட்டியிடமாட்டாது.

✦ அதேபோன்று தமிழ்த் தேசியப் பேரவை அதிகூடிய வாக்குகளைப் பெற்ற சபைகளில் தவிசாளர் தெரிவுக்குப் போட்டியிடும். அதன்போது தேர்தலில் மக்கள் வழங்கிய ஆணைக்கு மதிப்பளிக்கும் வகையில் ஏனைய தமிழ்த் தேசியக் கட்சிகள் ஆதரவு வழங்க வேண்டுமென பேரவை எதிர்பார்க்கிறது.

✦ பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் தமிழ்த் தேசியப் பேரவை இரண்டாவது நிலையில் இருக்கும் சபைகளில் துணைத் தவிசாளர் பதவிக்குப் போட்டியிடும்.

✦ பெற்றுக்கொண்ட வாக்குகளின் எண்ணிக்கையில் இரண்டாவது நிலையில் இருக்கும் தமிழ்த் தேசியக் கட்சிக்கு துணைத் தவிசாளர் தெரிவுக்கு பேரவை ஆதரவு வழங்கும்.

✦ எந்தவொரு நிலையிலும் சிங்கள பௌத்த பேரினவாத கட்சிகளுக்கும் அவற்றுக்கு ஆதரவான கட்சிகளுக்கும் இவ்வாறான பதவிகளுக்கான தெரிவுகளுக்கு ஆதரவு வழங்கப்படமாட்டாது.

இவற்றின்மூலம் உள்ளூராட்சிசபைகளின் ஆட்சி நிர்வாகத்தை தமிழ்த் தேசியக் கட்சி களின் கைகளில் வைத்திருப்பதுடன் எதிர் காலத்தில் எவ்வித இடையூறுகளுமில்லாது மக்களுக்கான பணிகளைச் சிறப்பாகச் செய்யமுடியுமென்று பேரவை நம்புகிறது - என்றுள்ளது. (அ-ம-26-66-125)

## இலங்கைக்...

கடற்றொழில், நீரியல் மற்றும் கடல்வளங்கள் அமைச்சுக்கும், பாதுகாப்பு அமைச்சுக்கும் இடையிலான கலந்துரையாடலொன்று நாடாளுமன்ற வளாகத்தில் அண்மையில் நடைபெற்றது.

தொடர்ச்சியாக அதிகரித்துவரும் அத்துமீறிய மீன்பிடி தொடர்பிலும், மீன்பிடி என்ற போர்வையில் இடம்பெறும் போதைப்பொருள் கடத்தலைக் கட்டுப்படுத்துவது தொடர்பிலும் இதன்போது நீண்ட நேரம் ஆலோசிக்கப்பட்டுள்ளது. இதைத் தொடர்ந்தே, நாட்டின் முழுக் கடற்பரப்பும் உச்சகட்டக் கண்காணிப்பின் கீழ் கொண்டுவரப்பட்டுள்ளது.

24 மணிநேரமும் இலங்கையின் கடற்பரப்பை கண்காணிப்பின் கீழ் வைத்திருக்க வேண்டியதன் அவசியம் தொடர்பில் கடற்றொழில் அமைச்சர் இராமலிங்கம் சந்திரசேகர் இதன்போது சுட்டிக்காட்டியுள்ளார். அவரின் கருத்தை பாதுகாப்பு பிரதியமைச்சர் அருண ஜெயசேகர ஏற்றுக்கொண்டுள்ளார்.

அத்துமீறிய மீன்பிடியைக் கட்டுப்படுத்துவதில் எந்தவொரு விட்டுக்கொடுப்புக்கும் அழுத்தங்களுக்கும் இடமில்லை என்றும் அமைச்சர் சந்திரசேகர் இதன்போது குறிப்பிட்டுள்ளார். (அ-ம-26)

## பிரிட்டனின்...

துள்ள அவர் நேற்று மேலும் தெரிவித்ததாவது:-

பிரிட்டனின் உயர்கல்வியை மிகவும் அதிகளவில் பெற்றுக்கொள்பவர்களாக இலங்கையர்கள் காணப்படுகின்றனர். அத்துடன், பிரிட்டிஷ் நிறுவனங்களில் தேர்ச்சி பெற்றுள்ள இலங்கையர்களை பிரிட்டனில் பணிகளுக்காக உள்ளீர்க்கவும் நான் வலியுறுத்தியுள்ளேன். இலங்கைக்கு வந்துள்ளமை எனக்குப் பெருமையாகவுள்ளது. அரசாங்கத்துடனும், வணிக சமூகத்துடனும் கருத்துகளை பரிமாறிக்கொண்டு, இருநாட்டு வர்த்தக உறவை வலுப்படுத்தும் வழிகளை ஆராய விரும்புகிறேன். SheTrades இணையப்பக்கத்தினை அறிமுகப்படுத்துவதில் பங்கெடுப்பது என் பெருமையாகும். இலங்கை பெண்கள் தொழில் முனைவோர்களுக்கு இது ஒரு பயனுள்ள ஆதாரமாக இருக்கும்.

இந்த ஆண்டில் இருநாட்டு வர்த்தக மதிப்பு சுமார் 1.6 பில்லியன் பவுண்டுகளாக உள்ளது. இதில் பெரும்பான்மையான நன்மை இலங்கைக்கே கிடைக்கின்றது. அத்துடன், இலங்கையின் இரண்டாவது பெரிய ஏற்றுமதி சந்தையாகவும் பிரிட்டன் உள்ளது - என்றார். (அ-ம-6)

## சிறுபோக...

மாவட்ட துறைசார் அதிகாரியான சோதிலட்சுமி விஜயராசா தெரிவித்துள்ளார்.

அவர் மேலும் தெரிவித்ததாவது:-

கிளிநொச்சி மாவட்டத்தில் சிறுபோக நெற்செய்கையில் இலை மடிச்சுக்கட்டியின் தாக்கம் பரவலாக இனங்காணப்பட்டுள்ளது. எனவே, இந்த விடயம் தொடர்பில் விவசாயிகள் அதிக அக்கறையுடன் இருக்கவேண்டும். அத்துடன், விவசாயத் திணைக்களத்தின் அறிவுறுத்தலைப் பின்பற்றி நோயை ஆரம்பத்திலேயே கட்டுப்படுத்தவேண்டும்.

விவசாயிகள் வயல்களில் நிழல்களைத் தவிர்ப்பதோடு, நைதரசன் உரப்பாவனையையும் குறைக்கவேண்டும். அத்துடன், சிபார்சு செய்யப்பட்ட இரசாயனங்களைப் பயன்படுத்தவேண்டும் - என்றார். (அ-ம-113)

## கொழும்பு...

நேற்று நடைபெற்ற ஊடக சந்திப்பின் போதே இந்த விடயத்தைக் கூறியுள்ளார். முதல்வர் வேட்பாளரை தெரிவுசெய்து விட்டோம். இன்று இதுபற்றி அறிவிக்கப்படும். சுமார் 25 வருடகால அனுபவம் அவருக்கு உள்ளது. பெயர்கூட இரண்டு எழுத்துகள்தான் என்று அவர் மேலும் தெரிவித்துள்ளார். (அ-ம-44)

## ஜூன் 3ஆம்...

சபாநாயகர் ஜகத் விக்கிரமரத்ன தலைமையில் அண்மையில்கூடிய நாடாளுமன்ற அலுவல்கள் பற்றிய குழுக் கூட்டத்தில் இது தொடர்பான தீர்மானம் எடுக்கப்பட்டுள்ளது. (அ-ம-இ)

## ஜிம் பிறவுண்...

பெற்ற இந்த நிகழ்வில், வீடமைப்பு பிரதி அமைச்சர் டி.பீ.சரத், இலங்கைக்கான இந்தியத் தூதுவர் சந்தோஷ் ஜா ஆகியோர் கலந்துகொண்டு மாதிரிக் கிராமத்தைத் திறந்துவைத்தனர்.

நாடாளுமன்ற உறுப்பினர் ஜெகதீஸ்வரன், பிரதேச செயலாளர் எம்.பிரதீப், தேசிய வீடமைப்பு அபிவிருத்தி அதிகார சபையின் அதிகாரிகள், திணைக்களத் தலைவர்கள் ஆகியோரும் நிகழ்வில் கலந்துகொண்டனர். (அ-ம-56)

## ஓமந்தையில்...

யாழ்ப்பாணம் இந்தியத் துணைத் தூதரகத்தில் கலாசார அதிகாரியாகக் கடமையாற்றிவந்த, கரவெட்டியைச் சேர்ந்த சிவஸ்ரீசச்சிதானந்தக் குருக்கள் பிரபாகரசர்மா (வயது-52) என்பவரே உயிரிழந்தவராவார்.

கட்டுநாயக்காவிலிருந்து யாழ்ப்பாணம் நோக்கிப் பயணித்த கார், யாழ்ப்பாணத்திலிருந்து வவுனியா நோக்கிப் பயணித்த டிப்பருடன் நேருக்கு நேர் மோதி விபத்துக்குள்ளாகியுள்ளது. உயிரிழந்தவரின் மனைவியான யாழ்ப்பாணப் பல்கலைக்கழக இராமநாதன் நுண்கலைப் பீட நடனத்துறை சிரேஷ்ட விரிவுரையாளர் சீதாலட்சுமி, அவரது மகன் மற்றும் உயிரிழந்தவரின் மாமனார் ஆகியோர் படுகாயமடைந்துள்ளனர். மூவரும் வவுனியா மாவட்ட மருத்துவமனையில் சிகிச்சைக்காகச் சேர்க்கப்பட்ட நிலையில், மகன் மேலதிக சிகிச்சைக்காக யாழ்ப்பாணம் போதனா மருத்துவமனையின் அதிதீவிர சிகிச்சைப் பிரிவில் சேர்க்கப்பட்டுள்ளார். சம்பவம் தொடர்பில் ஓமந்தைப் பொலிஸார் மேலதிக விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-66-26-100-33-28)

## குளத்தில்...

குளத்தில் மீன்பிடித்துக்கொண்டிருந்த ம.ஈழவன் (வயது - 23) என்ற இளைஞரே இவ்வாறு உயிரிழந்துள்ளார். சம்பவம் தொடர்பாக கனகராயன்குளம் பொலிஸார் விசாரணைகளை முன்னெடுத்துள்ளனர். (அ-ம-110)

Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

# மும்பையைத் தோற்கடித்து முதலிடம் பிடித்தது பஞ்சாப்

## ‘குவாலிபையர்' ஆட்டத்துக்குத் தகுதி இன்றைய ஆட்டத்தில் பெரும் எதிர்பார்ப்பு



**ஐ.பி.எல். தொடரில் நேற்று நடைபெற்ற ஆட்டத்தில் மும்பையைத் தோற்கடித்து புள்ளிப்பட்டியலில் முதலிடத்துக்கு முன்னேறியது பஞ்சாப். இதனால், பிளேஓவ் சுற்றில் குவாலிபையர் ஆட்டத்தில் விளையாடும் வாய்ப்பை அந்த அணி பெற்றது.**

நாணயச் சுழற்சியில் வெற்றிபெற்ற பஞ்சாப் அணி முதலில் களத்தடுப்பைத் தீர்மானித்தது. இதன்படி முதலில் துடுப்பெடுத்தாடிய மும்பை அணி 7 விக்கெட்டுக்களை இழந்து 184 ஓட்டங்களைப் பெற்றது. ஆரம்ப வீரர்களான ரிகில்டன் 20 பந்துகளில் 27 ஓட்டங்களையும், ரோகித் சர்மா 21 பந்துகளில் 24 ஓட்டங்களையும் பெற்று மந்தமான வகையில் இன்னிங்ஸை ஆரம்பித்திருந்தனர். இதனால் ஏற்பட்ட பாதிப்பு இன்னிங்ஸின் இறுதிவரை எதிரொலித்தது.

பதிலுக்குக் களமிறங்கிய பஞ்சாப் அணிக்கு ஆரம்ப வீரர் பிரப்சிம்ரன் சிங் 16 பந்துகளில் 13 ஓட்டங்களைப் பெற்று ஏமாற்றினார். எனினும் பிரியான்ஸ் ஆர்யா மற்றும் ஜோஸ் இங்கில்ஸ் இருவரும் இணைப்பாட்டமாக 109 ஓட்டங்களைப் பகிர்ந்தனர். 73 ஓட்டங்களுடன் இங்கில்ஸூம், 62 ஓட்டங்களுடன் பிரியான்ஸூம் ஆட்டமிழந்தனர். அவர்கள் ஆட்டமிழந்தபோது பஞ்சாப்பின் வெற்றி கிட்டத்தட்ட உறுதியாகியிருந்தது. அணித்தலைவர் ஸ்ரேயஸ் 16 பந்துகளில் 26 ஓட்டங்களைப் பெற்று வெற்றியுடன் ஆட்டத்தை முடித்தார்.

**இன்றைய ஆட்டம்**

ஐ.பி.எல். தொடரின் இறுதி லீக் ஆட்டத்தில் லக்னோ மற்றும் பெங்களூர் அணிகள் இன்று மோதுகின்றன. இந்த ஆட்டத்தில் பெங்களூர் வெற்றிபெற்றால், முதலாவது ‘குவாலிபையர்' ஆட்டத்தில் பஞ்சாப், பெங்களூர் அணிகள் மோதும். எலிமினேட்டர் ஆட்டத்தில் மும்பை, குஜராத் அணிகள் மோதும். பெங்களூர் தோல்வியடைந்தால், முதலாவது ‘குவாலிபையர்' ஆட்டத்தில் பஞ்சாப், குஜராத் அணிகள் மோதும். எலிமினேட்டர் ஆட்டத்தில் மும்பை, பெங்களூர் அணிகள் மோதும். (ம)

# இந்திய நீதிபதிகள் கூறியுள்ள கருத்து மனித மாண்புக்குப் பொருத்தமற்றது

## வைகோ சுட்டிக்காட்டு

கொழும்பு, மே 27

அகதிகளுக்கு எதிரான இந்திய உயர்நீதி மன்ற நீதிபதிகளின் கருத்துகள் மனித மாண்புகளுக்கு முற்றிலும் பொருத்தம் இல்லாதவை. இப்படிப்பட்ட கருத்துகளைப் பயன்படுத்துவதைத் தவிர்க்க தலைமை நீதிபதி அறிவுறுத்தவேண்டும் என்று ம.தி.மு.க. பொதுச்செயலாளர் வைகோ கோரிக்கை விடுத்துள்ளார்.

இது தொடர்பில் அவர் விடுத்துள்ள அறிக்கையில் தெரிவிக்கப்பட்டுள்ளதாவது:-

தமிழ்நாட்டில் இலட்சக்கணக்கான இலங்கைத் தமிழர்கள் அகதிகளாக வாழ்ந்துவருகிறார்கள்.

அவர்களில் சிலரை இந்திய அரசு, இந்தியாவிலிருந்து வெளியேற வேண்டும் என உத்தரவிட்டபோது, இது தொடர்பான வழக்கில் சென்னை உயர் நீதிமன்றம், “இலங்கை தமிழ் அகதிகளை அவர்களின் ஒப்புதல் இல்லாமல் திருப்பி அனுப்பும் அதிகாரம் அரசுக்கு உண்டு என்பது ஏற்கத்தக்கது அல்ல. திரும்பிச்செல்ல விரும்பாத அகதிகளைக் கட்டாயப்படுத்தி வெளியேற்றக்கூடாது” என ஆணை பிறப்பித்தது. இதன் விளைவாக இலங்கைத் தமிழர்கள் இங்கு வாழ்ந்துவருகிறார்கள்.

இந்தநிலையில் உயர் நீதிமன்ற நீதிபதிகளின் கருத்துகள் அரசமைப்புச் சட்டம் வலியுறுத்துகிற மனித மாண்புகளுக்கு முற்றிலும் பொருத்தம் இல்லாத வார்த்தைகள்.

நீதிபதிகள் இப்படிப்பட்ட கருத்துகளைப் பயன்படுத்துவதை தவிர்க்க அறிவுறுத்தவேண்டும் என்று உயர் நீதிமன்றத் தலைமை நீதிபதியை கேட்டுக்கொள்கிறேன் - என்றுள்ளது. (எ-இ)

**வாடகைக்குத் தேவை**

வெளிமாவட்ட மாணவர் தங்கி நின்று கற்பதற்கு யாழ் நகரை அண்டிய பகுதியில் அறை வாடகைக்கு தேவை.

தொடர்புகளுக்கு:
**077 959 2628**

**பணியாளர் தேவை**

பில் கிளார்க் - (ஆண்/பெண்) O/L சித்தி
வயறிங் வேலை , தச்சு வேலை,
வெல்டிங் வேலை, கல், தூண்,
பூக்கல், பூச்சாடி
வேலை தெரிந்தவர்கள் தேவை.
(CS/58368) J-1

தொடர்பு:- **077 457 3580**

**Smart Paws Animal Hospital**
**கால்நடை வைத்தியசாலை**

We offer compassionate and professional veterinary services for your beloved pets. Come to our vet hospital and check your pet's health

**Our Services (எமது சேவைகள்)**
- Treatments (சிகிச்சைகள்)
- Vaccination (நோய்த்தடுப்பூசிகள்)
- Surgery (சத்திரசிகிச்சைகள்)
- Pet Foods & Accessories (செல்லப்பிராணிகளுக்கான உணவுப்பொருட்கள் மற்றும் ஏனைய பொருட்கள்)
- Mobile Veterinary Service (நடமாடும் கால்நடை வைத்திய சேவை)
- Laboratory Services (ஆய்வுகூட சேவைகள்)



Contact Us :
781, Hospital Road, Jaffna
074 33 444 50

# இந்த அரசாங்கத்தை மக்கள் விரட்டியடிப்பர்

## நளின் பண்டார தெரிவிப்பு

கொழும்பு, மே 27

இந்த அரசாங்கத்தை மக்கள் வீட்டுக்கு அனுப்புவார்கள் என நாடாளுமன்ற உறுப்பினர் நளின் பண்டார தெரிவித்துள்ளார்.

இந்த அரசாங்கம் முன்னோக்கிச் செல்லக்கூடிய அரசாங்கமாகத் தென்படவில்லை. 2026 ஆம் ஆண்டு மே மாதம் 24ஆம் திகதிக்கு முன்னதாக தேசிய மக்கள் சக்தி அரசாங்கத்துக்கு வாக்களித்த மக்களே அவர்களை வீட்டுக்கு அனுப்புவார்கள். அனுபவம் அற்ற இந்த அரசாங்கம் எவ்வித திட்டங்களும் இன்றிச் செயற்பட்டுவருகின்றது. பாதாள உலகக் குழுக்களுடன் அரசியல்வாதிகளுக்குத் தொடர்பு இருந்தால் அவர்கள் பற்றிய விபரங்களை அரசாங்கம் வெளியிடவேண்டும் என்றும் அவர் குறிப்பிட்டுள்ளார். (ச-இ)



## சிறுமி துஷ்பிரயோகம் குற்றவாளிக்கு 17 ஆண்டுகள் சிறை

கொழும்பு, மே 27

7 வயது சிறுமியைப் பாலியல் துஷ்பிரயோகம் செய்த சம்பவத்தில் குற்றவாளியாக அடையாளங்காணப்பட்ட 5 பிள்ளைகளின் தந்தையொருவருக்கு கொழும்பு மேல் நீதிமன்றம் 17 வருட கடூழிய சிறைத்தண்டனை விதித்துள்ளது.

நீண்ட வழக்கு விசாரணைகளின் பின்னர் தீர்ப்பை வெளியிட்ட நீதிமன்றம் குற்றவாளிக்கு 30 ஆயிரம் ரூபா தண்டப்பணமும் விதித்தது. செலுத்தத் தவறும் பட்சத்தில் மேலதிகமாக ஒரு வருடம் சிறைத்தண்டனையை அனுபவிக்க நேரிடுமெனவும் அறிவிக்கப்பட்டுள்ளது. (ச-இ)



Digitized by Noolaham Foundation.
noolaham.org | aavanaham.org

இப்பத்திரிகை, நியூ உதயன் பப்ளிக்கேசன் (பிறைவேற்) லிமிட்டெட் நிறுவனத்தினரால் யாழ்ப்பாணம் கஸ்தூரியார் வீதியில் 361 ஆம் இலக்கத்தில் உள்ள அவர்களது பணிமனையில் 27.05.2025 இல் அச்சிட்டு வெளியிடப்பெற்றது.